The Anna Library

# WILLIAM CAREY

Translator of the Bible into Sanskrit
The Father and Founder of Modern Missions

# உல்லியம் கேரி

“தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்
தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்யமுயல்”

New Edition
Revised by the Rev. A. C. Clayton



கேரி ஐயரும், அவருடைய பண்டிதரும்.

WILLIAM CAREY.

# உல்லியம் கேரி.

## முகவுரை.

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே கிறிஸ்துமார்க்கம் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பட்டுச் சாமான்களும் முத்துக்களும் விற்பனைசெய்யும்படி எகிப்து தேசத்திலுள்ள அலெக்சந்திரியா நகருக்குப்போயிருந்த இத்தேச வியாபாரிகள் கிறிஸ்துவின் சுவிசேஷம் என்னும் பெரிய பொக்கிஷத்தை அங்கே கண்டுபிடித்தார்கள். அவர்கள் திரும்பிவந்தபொழுது அதைப்பற்றிய நற்செய்தியைத் தங்கள் சிநேகிதருக்கு அறிவித்தார்கள். இவ்விதமாக கிறிஸ்துமார்க்கம் இந்தியாவுக்கு வந்தது. இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கிறிஸ்தவ போதகன்மார் வேண்டுமென்று இங்குள்ள ஜனங்கள் அலெக்சந்திரியா அத்தியக்ஷரிடத்தில் கேட்டுக்கொள்ள, அவர் பான்தீன்ஸ் என்னும் ஓர் சிறந்த கல்விமானை அனுப்பினார். நமக்குத் தெரிந்திருக்கிற அளவு சொல்லவேண்டுமானால் அவர்தான் முதல்முதல் இந்தியாவுக்கு வந்த மிஷனெரி.

நான்காம் நூற்றாண்டுபோல் சில சீரியக் கிறிஸ்தவர்கள் மலையாளக் கரையில் வந்து குடியேறினார்கள். இந்து இராஜாக்கள் அவர்களுக்கு மிகுந்ததயை பாராட்டினதுமன்றி, மார்க்க துறைத்தன விஷயங்களில் அவர்களே தங்கள் காரியாதிகளைத் தங்கள் அத்தியக்ஷக் குருக்களால் நடத்திக்கொள்ள அநுமதியும் கொடுத்தார்கள்.

போர்த்துக்கேசர் இந்தியாவுக்கு வந்த ஒவ்வொரு தடவையும் ரோமான்மார்க்க மிஷனெரிமார் அவர்களோடுகூட வந்தார்கள். இவர்களில் மிகவும் ஊக்கமாய் வேலைசெய்தவர் பிரான்சிஸ் சவேரியார். அவரால் அநேகர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

1706-ம் வருஷம் தென்மார்க்குத் தேச அரசன் இந்தியாவின் தென்பாகத்திலிருக்கும் தரங்கன்பாடிக்கு அனுப்பின மிஷனெரிமாரே முதல்முதல் இந்தியாவுக்கு வந்த புரோடெஸ்டாண்டு மிஷனெரிமார். பிற்பாடு வந்தவர்களில் முக்கியமானவர் சுவாட்ஸ் ஐயர்.

இங்கிலாந்திலிருந்து முதலாவது இந்தியாவுக்கு வந்த புரோடெஸ்டாண்டு மிஷனெரி உல்லியம் கேரி என்பவர்.

## இளம்பிராயச் சரித்திரம்.

உல்லியம் கேரி என்பவர் 1761-ம் வரு ஆகஸ்டு மீ 17-ம் உ பிறந்தார். அவருடைய ஜனன ஊர் பாலர்ஸ்புரி. அது இங்கிலாந்தின் மத்தியபாகத்தில் நொர்தாம்டன் என்னும் பட்டணத்திற்கு 11 மைலுக்குத் தெற்கே இருக்கிறது. அவருடைய தகப்பனார் ஒரு குடிசையில் நெசவுவேலை செய்துகொண்டிருந்தார். உல்லியம் என்பவர்தான் மூத்த பிள்ளை ; இவர் ஆறு வயது பிராயமாயிருக்கையில் தகப்பனருக்கு ஒரு உபாத்தியாா வேலை கிடைக்கவே, அவர்கள் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த ஒரு வீட்டில் குடிக்கூலியில்லாமல் வாசம்பண்ணிவந்தார்கள்.

சிறு பிராயந் துவக்கியே கேரி என்பவர் அறிவின்பேரில் மிகவும் நாட்டமுள்ளவராயிருந்தார். தம்மைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் மிகவும் கூர்மையாய் கவனித்துப் பார்க்கிறவராய் இருந்தார். உலாத்தப் போகும்போது செடிகளையும் பூக்களையும் கவனமாய்ப் பார்த்து, ஒரு சிறு தோட்டத்தில் மிகவும் கரிசனையோடு பயிரிட்டுவருவார். மிருகங்களும் அவருக்குப் பிரியந்தான். பூச்சிகளைப்பற்றி மிகவும் விருப்பத்தோடு படிப்பார். தமக்குப் பிரீதியுள்ள சில பட்சிகளை வைத்து வளர்த்தும்வந்தார்.

பையனாக இருக்கும்போதே இவர் விடாமுயற்சிக்குப் பேர்போனவராயிருந்தார். தாம் எதைத் தொடங்குவாரோ அதையெல்லாம் முடித்துவிடுவார். வருத்தங்களைக் கண்டு ஒருக்காலும் மனஞ் சலித்துப்போகமாட்டார். ஒரு மரத்தில் ஏறும்படி ஒருவிசை பிரயாசப்பட்டபோது தவறிவிழுந்து தம்மைக் காயப்படுத்திக்கொண்டார். ஆனால் சுகமானவுடன் திரும்ப அதில் ஏறிப்பார்த்ததே அவர் முதலாவது செய்த காரியம். பாட விஷயத்திலும் ஒரு காரியத்தைப்பற்றி தெளிந்த அறிவு அடையுமட்டும் சோர்வடையாமல் அதையே படித்துக்கொண்டிருப்பார். அவருடைய ஜீவியத்தின் சித்திக்கு முக்கிய காரணம் இவ்விடாமுயற்சியே.

14 பிராயமாயிருக்கும்பொழுது கேரி என்பவர் வயலில் வேலைசெய்து ஜீவனம்பண்ணும்படி பார்த்தார். அவ்விடங்களில் முக்கிய வேலை சப்பாத்து செய்வதுதான். ஆகவே 17 வயதாயிருக்கும்போது கேரி என்பவர் பாலர்ஸ்புரிக்கு 9 மைல் தூரத்திலுள்ள ஹாக்லெற்றன் என்னும் ஊரில் நிக்கொல்ஸ் என்னும் செம்மானிடத்தில் வேலை கற்றுக்கொள்ளும்படி போனார்.

தோல் வேலை மிகவும் தீட்டுப்படுத்துகிற வேலை என்று நினைத்து இந்தியர் செம்மான்களை மிகவும் தீழ்ப்பாக நினைக்கிறார்கள். இவ்வெண்ணம் சரியல்ல. பசுவின் மலம் தூய்மையான

தென்று ஒப்புக்கொள்ளும்போது அதின் தோலை அசுத்தமென்று ஏன் எண்ணவேண்டும்?

பிற்காலத்தில் பேர்போன வித்துவான்கள், கவிராயர், வேத சாஸ்திரிகள், சீர்திருத்தங்கள் உண்டுபண்ணினவர்கள் என்று பேர் பெற்ற அநேகர் முதலாவது சப்பாத்து செய்கிறவர்களாய் இருந்தார்கள் என்பது மிகவும் வியக்கப்படத்தக்க காரியமே. இதைக் கவனிக்குங்கால் இவ்வேலையானது தியானத்துக்கு அனுகூலமான ஓர் நல்ல வேலையாகவே தோன்றுகிறது.

சிறுவனுன கேரி தன்னுடைய எஜமான் புஸ்தகசாலையில் சில கிரேக்கு பாஷை பதங்களுள்ள ஒரு புதிய ஏற்பாட்டு வியாக்கியான புஸ்தகத்தைக் கண்டார். அவருக்குக் கிரேக்கு பாஷை எழுத்துகள் தெரியாது. ஆனுல் அவர் அவ்வெழுத்துகளைத் தம்மால் கூடியஅளவு ஒரு தாளில் பேர்த்து எழுதி கிரேக்கு பாஷை தெரிந்த ஒருவரிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தார். கேரி சிறுவனுக இருக்கும்போதே லத்தீன் அகராதி ஒன்றை மனப்பாடம் பண்ணியிருந்தார். இப்போது கிரேக்கு பாஷையை முதல்விசையாகப் படிக்கத் தொடங்கினுர்.

கேரி சப்பாத்து செய்யும் வேலைகற்றுக் கொள்ளும்படி ஒருவரிடம் வேலை அமர்ந்தார். ஆனுல் அந்த எஜமான் இவர் சீராய் வேலை கற்றுக்கொள்ளுமுன் இறந்துபோனுர். என்றாலும் அவ் வூரிலுள்ள ஓர் செம்மான் சீக்கிரத்திற்குள்ளாக அவரைக் கூலி வேலைக்காரனுக எடுத்துக்கொண்டான். அவர் அவ்வளவு செவ்வையாய் வேலை கற்றுக்கொள்ளாததால் அவருக்குத் தாழ்ந்த சம்பளந் தான் முதலாவது கொடுக்கப்பட்டது. கொஞ்சக் காலத்திற்குள்ளோ அவர் மிகவும் நிபுணனுன வேலைக்காரனுகிவிட்டார். ஆதலால் இவர் செய்த இரண்டு சபபாத்தையே ஜனங்கள் மாதிரிக்காக பார்க்கத்தக்கதாய் வெளியே கடையின்முன் இவருடைய எஜமான் தூக்கிவைத்தான்.

இதுமட்டும் கேரி என்பவர் பக்திக்கடுத்த விஷயத்தைப்பற்றிச் சற்றும் கவலையற்றவராகவே இருந்தார். ஓர் தடவை இவருடைய எஜமான் வேலை கற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு இனுங் கொடுக்கும் நோக்கமாய்ப் பணஞ் சேகரிக்க இவரை அனுப்பினுர். இவர் சேகரித்த ரூபாய்களில் ஒரு அரை ரூபாய் ஈய ரூபாயென்று பின் தெரியவந்தது. எஜமான் தன்னைக் கோபிப்பார் என்று இவர் பயந்து, அந்தக் கள்ள ரூபாய் தான் சேகரித்ததிலுள்ள ரூபாயல்ல, தான் வாங்கியிருந்த சில சாமான்களுக்காக எஜமான் கொடுத்த அரை ரூபாய் அந்தக் கள்ள ரூபாய் என்று சொல்லிப்போடவேண்டும் என உடனே யோசித்துக்கொண்டு, இந்தக் கள்ளத்தனத்தில்

தேவன் எனக்கு உதவி செய்வாரானால், என்னுடைய எல்லா கெட்ட பழக்கங்களையும் இதுமுதல் முழுவதுமாக விட்டுவிடுவேன்' என்று தேவனை நோக்கி ஊக்கமாய் ஜெபித்தார். ஆனால் இவர் செய்த கள்ளத்தனமோ கண்டுபிடித்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அக்காலத்தில் நன்மை தீமை என்பவைகளைக்குறித்து ஆலோசிக்க ஆரம்பித்து, கேரி என்பவர் தமக்கு மனமாறுதலும் அவசியமென்று கண்டு மார்க்க சடங்காசாரங்களினால் தம்முடைய மனச்சாட்சியை சாந்திபண்ண மிகவும் பிரயாசப்பட்டார். ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்றுதரம் ஆலயத்திற்கும் ஒருதரம் ஜெபக்கூட்டத்திற்கும் போய் வருவார். இவ்விதமாக தமமுடைய சுயபுண்ணியத்தினால் தாம் ஆத்தும இரட்சிப்பு பெற்றுக்கொள்ளலாமென்று எண்ணினார். கொஞ்ச காலத்திற்குப் பிற்பாடு தாம் செய்துவந்த பலவிதமான பாவங்களுக்காக தாம் பிராயச்சித்தஞ் செய்துகொள்வது கூடாது என்று உணர்ந்தார். ஆகவே ஒரு தேவரட்சகர் அவசியம்.

அநாதிகால முதலாயிருக்கிற தேவனுடைய குமாரன், நம்மை இரட்சிக்கும்பொருட்டு இப்பூலோகத்தில் மனுஷனாக அவதரித்து, தேவனுடைய சகல நீதியையும் சரிவர நிறைவேற்றி, சிலுவையிலே மரித்து, தம்மேல் பக்தி வைத்தவர்களுக்குத் தமது புண்ணிய பலன்களை அருளி அவர்களை இரட்சித்துக்கொள்வார். இதை அறிந்து கேரி என்பவர் தம்முடைய பாவ நிலைமையை உணர்ந்தவராய் இயேசுவானவர் அருளும் இரட்சிப்பைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார். அந்நாள் முதல் அவர் எப்பொழுதும் இயேசு கிறிஸ்துவின் மெய்ச் சீஷனாய் ஜீவித்தார் என்று தோன்றுகிறது.

## செம்மானும் பிரசங்கியும்.

கேரி என்பவர் 18 வயதாயிருக்கும்போதே பிரசங்க வேலை செய்யத் தொடங்கினார். ஹாக்லெற்றன் ஊரிலுள்ள தேவபக்தியுள்ள சிலர் ஒரு சிறு சபையாக கூடி ஜெபம்பண்ணுவது வழக்கமாயிருந்தது. அவர்கள் சில ஜெபக்கூட்டங்களில் வேதத்திலுள்ள ஏதாவது ஒரு பாகத்தின்பேரில் சில போதனைகள் சொல்லும்படி கேரி என்பவரைக் கேட்டுக்கொள்வார்கள். 'அவர்கள் படிப்பாளிகளாயிராதபடியினால் சிலவேளைகளில் என்னை அதிகமாய் மெச்சிப் பேசுவார்கள். இது எனக்கு மிகுந்த கேடு விளைவித்தது' என்று பிற்பாடு ஒருதரம் ஒருவருக்கு எழுதினார்.

பக்கத்தூரிலுள்ள ஜனங்கள் தங்களுக்கு ஆராதனை நடத்த ஆளில்லை என்று சொல்லி கேரி என்பவரைத் தங்களுக்குப் பிரசங்கஞ் செய்யும்படி அழைத்தார்கள். இப்படி அவர்கள் கேட்டுக்

கொண்டதற்காக $3\frac{1}{2}$ வருஷம் ஓய்வுநாட்கள்தோறும் அங்கே போய் பிரசங்கம் நடப்பித்துவந்தார். அவர் ஜெனன ஊரிலுள்ள அவருடைய சிநேகிதர்களும் தங்களிடத்திற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். போகவர 20 மைல் நடக்கவேண்டியதாயிருந்த போதிலும் மாதத்திற்கு ஒருதரம் அங்கேயும் போய் பிரசங்கித்து வந்தார்.

கேரி என்பவருக்கு 20 பிராயமாகுமுன்னமே அவருடைய எஜமான் மரித்துப்போனார். அப்பால் அவர் தம்முடைய எஜமானுடைய வேலையை நடப்பித்துக்கொண்டு அவருடைய சகோதரியாகிய டோராதி பிளாக்கெற்று என்பவளைக் கலியாணஞ் செய்துகொண்டார். கேரி என்பவர் அவளை முழுமனதோடும் நேசித்து மிகவும் பட்சமாய் நடத்திவந்தார்.

கேரி என்பவர் தம் கையால் எழுதின விளம்பரப் புதுப் பலகை ஒன்றைக் கடைமுன் தொங்கவைத்தார். அப்பலகை இந் நாள்மட்டும் இருக்கிறது.

கலியாணம் முடித்ததினால் கேரி என்பவர் அநேக வருஷங்களாக மிகுந்த வருத்தம் அனுபவித்தார். அவருடைய வேலையினால் தாம் மாத்திரம் வருத்தமின்றி சொகுசாய் ஜீவனம்பண்ணக்கூடியதாயிருந்தது. ஆனால் அவரோ அதைக்கொண்டு மனைவி மக்களையும் சவரக்ஷணை செய்யவேண்டியதாய் இருந்தது. கலியாணத்திற்குப் பிற்பாடு கேரி என்பவர் ஹாக்லெற்றன் ஊரில் ஓர் சிறுவீடு வாடகைக்கு எடுத்து அதில் வாசஞ்செய்தார். அவ்வீட்டையடுத்து இருந்த ஒரு சிறு தோட்டத்தை அவர் மிகவும் கரிசனையாய் பயிரிட்டு, சப்பாத்து செய்யும் வேலையினால் கிடைக்கும் ஆதாயத்தைவிட அதிக ஆதாயமடைந்தார். அக்காலத்தில் இரண்டு வயதுள்ள அவருடைய பெண் குழந்தையும் மரித்துப்போயிற்று. அதே சமயத்தில் அவருக்கும் காய்ச்சல் துவக்கிப் பின் 18 மாசமாக அதினால் வருத்தப்பட்டார். இப்படி பெலவீனமாயிருக்கும் காலத்திலேயும் சாப்பாட்டுக்காக தம்முடைய சாமான்களை விற்கும்படி ஊர் ஊராய் அடிக்கடி பிரயாணஞ் செய்யவேண்டியதாய் இருந்தது. சிலவேளைகளில் ரொட்டி முதலிய சாப்பாட்டுச் சாமான் வாங்கப் பணமில்லாமல் நாள்முழுதும் பட்டினியாயிருப்பார். அவருடைய தம்பி ஒருவன் தனக்கு மிஞ்சினதெல்லாவற்றையும் அனுப்பி கொஞ்ச உதவி செய்துவந்தான். அவருடைய ஜனன ஊரார் கொஞ்சப் பணம் சேகரித்துக் கொடுத்தார்கள். அதைக்கொண்டு அவர் பிடிங்றன் என்னும் ஊரில் ஒரு சிறு குடிசை கட்டி வாசம்பண்ணினார். இவ்வூரில் அவர் சப்பாத்துவேலை செய்ததோடு ஒரு சாயங்காலப் பள்ளிக்கூடமும் வைத்து நடத்திவந்தார்.

இக்காலமெல்லாம் அறிவில் தேறும்படி மிகவும் ஜாக்கிரதையாய் பிரயாசப்பட்டு உழைத்துவந்தார். சில புஸ்தகங்களை இரவலாக வாங்கி வாசித்தார்; இன்னும் சில புஸ்தகங்களை வாங்குவதற்கென்று பட்டினியாயிருந்து பணம் மிச்சம்பிடிப்பார். பாஷைகளைக் கற்றுக்கொள்ளத்தக்கதான திறமை மிகுதியாய் அவருக்கு இருந்தது. லத்தீன், கிரேக்கு பாஷைகளைக் கற்றுக்கொண்டது மாத்திரமல்ல, எபிரேயு, டச்சு, பிரான்சு முதலிய பாஷைகளையுங் கற்றுக்கொண்டார். தமக்குமுன் ஒரு புஸ்தகமுமில்லாமல் வேலைசெய்ய உட்காரவேமாட்டார். இப்படி புஸ்தகம் முன்னுக்கு இல்லாத சமயங்களில், மனதில் அறப் பதியும்படியாக தாம் முன் கற்றவைகளை ஞாபகப்படுத்திக்கொண்டிருப்பார்.

பிடிங்றன் ஊரிலுள்ள வீட்டைச்சார்ந்தும் ஒரு சிறு தோட்டம் இருந்தது. அதில் அவர் காலையும் மாலையுமாக பயிரிட்டுவந்தார். அவ்வீடு சதுப்புநிலத்தில் இருந்தபடியினால் அவருக்கு ஜுரம் உண்டாகி அதினால் வாலிபனாக இருக்கும்போதே தலைமுடி கழிந்துபோயிற்று.

உல்லியம் கூப்பர் என்னும் புலவர் 20 வருஷக்காலமாக வசித்து வந்த ஒல்னி என்னும் இடத்திற்குச் சமீபமாய் கேரி என்பவர் சஞ்சரித்தார். சில வருஷங்களாக கேரி என்பவர் அநேக இடங்களில் பிரசங்கங்கள் நடப்பித்துக்கொண்டு வந்திருந்தார். ஆனால் இப்போது கிரமப்படி ஒரு குருவாக நியமிக்கப்பட விரும்பி, ஒல்னி சபையாரிடத்தில் கேட்டார். அவர்கள் அவர் குணசீலத்தைப் பரிசோதித்து, 1785-ம் ஆு ஆகஸ்ற்று மீ 10-மட 24-ம் வயதில் தேவ ஊழியத்தைச் செய்யும்படி அவருக்குக் குருப்பட்டங் கொடுத்தார்கள்.

## தற்கால மிஷன்களின் ஆரம்பம்.

**நொ**ர்தாம்ற்றனுக்கு நாலு மைலுக்கு வடக்கேயுள்ள மோல்ற்றன் ஊர் சபையார் கேரி என்பவரைத் தங்களுக்குக் குருவாயிருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். மோல்ற்றன் ஊர் ஜனங்கள் மிகவும் ஏழைகள்; லண்டன் பட்டணத்திலுள்ள ஓர்வகை பொக்கிஷப் பணத்திலிருந்து வருஷந்தோறும் வரும் 50 ரூபாய் நீங்க அவர்கள் அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 100 ரூபாய் மாத்திரம் சம்பளமாக கொடுக்கக்கூடியதாயிருந்தது. ஆனால் அவ்வூர் உபாத்தியாயர் அப்போதான் வேலையை விட்டுவிட்டதால் கேரி என்பவர் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொடுத்தும் கொஞ்ச வருமானம் உண்டுபண்ணிக்கொள்ளலாம் என்று நினைத்தார்.

கேரி என்பவர் கல்விகற்பதற்கு மிகவும் திறமையுள்ளவராய் இருந்தபோதிலும் மற்றவர்களுக்கு அக்கல்வியைப் புகட்டுவதில்

அவ்வளவு திறமையுள்ளவரல்ல. ‘நான் பள்ளிக்கூட வேலை பார்த்த காலத்தில் பிள்ளைகளை நான் அடக்குகிறதற்குப் பதிலாக அவர்கள் என்னை அடக்கிக்கொண்டிருந்தார்கள்’ என்று அவர் பிற்காலத்தில் ஒரு தடவை சொன்னார்.

கேப்ற்றன் கூக் என்பவர் பேர்போன ஓர் அங்கிலேய கப்பல் யாத்திரிகர். அவர் யாத்திரை செய்யும்போது பஸிபிக் சமுத்திர சில தீவுகளில் கண்ட விகற்பமான ஜனங்களைப்பற்றிய ஒரு சரித்திரம் பிரசுரஞ் செய்யப்பட்டது. அச்சனங்களுடைய அறிவீனம், மூடபக்தி, நரமாமிசபக்ஷணம் ஆகிய இவைகளைப்பற்றி கேரி ஐயர் வாசித்துப்பார்த்தபொழுது மனதில் அதிக வருத்தமுள்ளவராய் அவர்களை நாகரீக நிலைமைக்குக் கொண்டுவரும்படி செய்யவேண்டியவைகளைக் குறித்து ஆலோசிக்கலானார். அப்படியே உலகத்தின் மற்றும் தேசங்களின் நிலைமையும் அவருக்குத் தெரிய வந்தது. ஆகவே, அவர் தோலினால் பூமிஉண்டை ஒன்று செய்து உலகத்திலுள்ள பற்பல மார்க்கங்களையும் காட்டத்தக்கதாக அதில் பற்பல வர்ணம் பூசி, அதைக்கொண்டு பூமிசாஸ்திரம் படிப்பித்து வந்தார்.

பள்ளிக்கூட வேலையில் கேரி ஐயர் அவ்வளவாய் சித்திபெறவில்லை. ஆகவே, தம்முடைய குடும்ப சவரக்ஷணைக்காக முன்போல சப்பாத்து வேலையும் செய்யவேண்டியதாயிற்று. நொர்தாம்ற்றனிலுள்ள ஓர் கவர்ண்மென்று ஒப்பந்தக்காரன் அவருக்கு வேலை கொடுத்தான். தாம் செய்து முடித்த சப்பாத்துகளைக் கொடுத்துவிட்டு வேறே தோல் திரும்ப வாங்கிக்கொண்டுவருவதற்காக இரண்டு வாரத்திற்கொருதரம் 8 மைல் நடந்துபோவார்.

மோல்ற்றன் ஊரில் வசிக்கும்போது தம்முடைய தேர்ச்சியைப் பற்றி மிகவும் கருத்துள்ளவராய் இருந்தார். ஒவ்வொரு மணி நேரத்திலும் தாம் செய்யவேண்டிய வேலை இன்னதென்று குறிப்பிட்டு வேலை நடப்பிப்பார். இவ்வளவு வேலை அவர் எப்படித்தான் செய்துவிட்டார் என்று நாம் வியக்கத்தக்கவிதமாய் அவர் காரியாதிகளை முடிப்பதற்குக் காரணம், இப்படி நேரத்தை ஒழுங்குபடுத்தி செலவிட்டதென்று ஒருவாறு சொல்லலாம். அவர் அநேக குருமாரோடு பழக்கம்பண்ணினார்.

இதற்கிடையில் கேரி ஐயர் அந்நிய ஜனங்களுக்குச் சுவிசேஷத்தை எப்படி அனுப்பலாமென ஆலோசித்துக்கொண்டிருந்தார். அவர் சிநேகிதர்களில் புள்ளர் ஐயர் என்பவர் கேரி ஐயருடைய வீட்டுக்குள் போனபோது அநேக காயிதங்கள் ஒன்றாக ஒட்டி வரைந்திருந்த ஒரு பெரிய படம் அங்கே சுவரில் தூக்கிப் போட்டிருக்கக் கண்டார். அதில் அக்காலத்தவருக்குத் தெரிந்

திருந்த ஒவ்வொரு தேசத்தின் மார்க்கம், ஜனத்தொகை முதலிய விஷயங்கள் பதிந்திருந்தது. வேலை செய்யும்போது கேரி ஐயர் அடிக்கடி அந்தப் படத்தைப் பார்த்து உலகத்திலுள்ள பற்பல ஜாதியாரைப்பற்றி நினைத்து அவர்களை நாகரீகத்திற்குக் கொண்டு வர எவ் வழிவகைகள் உபயோகிக்கலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருப்பார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் தம்முடைய சீஷருக்குக் கொடுத்த கடைசிக் கட்டளை : 'நீங்கள் புறப்பட்டுப் போய், நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் சகல ஜாதிகளும் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்' என்பது. சில வருஷங்களாக இந்தக் கட்டளையின்படி சுவிசேஷம் பிரசங் கிக்கப்பட்டது; அநேகர் கிறிஸ்தவர்களுமானார்கள். கொஞ்சக் காலத் திற்குப் பிற்பாடு இவ்வேலை சற்றுவது நடந்தேறவில்லை என்று சொல்லலாம். குருமாருங்கூட கேரி ஐயருக்கு இச்சுவிசேஷ முயற் சியில் உதவி செய்யவில்லை. குருமாருடைய ஓர் கூட்டத்தில் கேரி ஐயர் 'அந்நிய ஜாதிகளுக்குள் சுவிசேஷம் பிரபல்லியமாகிறதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டியது கிறிஸ்தவர்கள் கடமை' என்பதைப் பற்றி ஆலோசிக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்போது வந்திருந்த வயதுசென்ற ஒரு குருவானவர் அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுப் பிரமிப்படைந்து : 'வாலிபனே, உட்காரும்; தேவன் அந் நிய ஜனங்களைக் குணப்படுத்தச் சித்தமாகும்பொழுது, உம்மு டைய உதவியாவது என்னுடைய உதவியாவது இல்லாமல் அதைச் செய்து முடிப்பார்' என்று சத்தமிட்டார்.

இப்படியெல்லாம் தடைகளிருந்தபோதிலும் கேரி ஐயர் தம் முடைய முயற்சிகளில் தளரவில்லை. அந்நியர்களுடைய குணப் படுதலைப்பற்றிய சரியான எண்ணம் பரவும்படியாக ஒரு சிறு பத் திரிகை எழுதினர். அதின் முதல் பக்கத்தில் எழுதியிருந்தது என்னவென்றால், 'அந்நியர்கள் குணப்படுவதற்கு முயற்சிசெய்ய வேண்டியது கிறிஸ்தவர்களுடைய கடமை என்பதைப்பற்றிய ஆராய்ச்சி. இதில் பற்பல தேச ஜனங்கள் மதாசாரத்தைப்பற்றி யும், தற்காலம்வரையும் கிறிஸ்துமார்க்க பிரபல்லியத்திற்காக முயற் சிகள் எடுக்கப்பட்டு எவ்வளவு தூரம் சித்தியடைந்திருக்கிறது என் பதைப்பற்றியும், இனிமேலும் இவ்விஷயமாய் முயற்சி செய்வது கூடிய காரியமா என்பதைப்பற்றியும் உல்லியம் கேரி என்பவரின் தாற்பரியம் அடங்கியிருக்கிறது' என்பதே. அச்சமயத்தில் உலகத்தி லுள்ள ஜனத்தொகை 73 கோடியே பத்து லக்ஷம்; இவர்களில் 42 கோடி கிறிஸ்தவ மதத்தை தெரியாதவர்கள்; 13 கோடி மக மதியர்; 10 கோடி ரோமான் கிறிஸ்தவர்கள்; 4 கோடியே நாற்பது

லக்ஷம் புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்கள்; 3 கோடி கிரேக்கு சபை கிறிஸ்தவர்கள்; உத்தேசம் 70 லக்ஷம் யூதர்கள். அப்பத்திரிகை மனதில் படத்தக்கதாக மிகுந்த நியாயதோரணையோடு எழுதப்பட்டிருந்தது; ஆனால் அதைப் பிரசுரஞ் செய்வதற்குக் கேரி ஐயரிடத்தில் பணமில்லை. ஒரு துரைமகனிடத்தில் அதைப்பற்றி பேசினபோது அவர் 100 ரூபாய் கொடுத்தார். என்றாலும் அதை அச்சிட சில நாட்கள் சென்றது.

1789-ம் ௵ லெஸ்ற்றர் பட்டணத்து சபையார் தங்களுக்குக் குருவாயிருக்கும்படி கேரி ஐயரைக் கேட்டுக்கொண்டார்கள். அது சற்று பெரிய சபை: ஆகவே அவருக்கு முன்னிலும் சற்று அதிக வருமானம் கிடைத்ததென்றாலும் அவ்வருமானம் அவருக்குப் போதுமானதா யிருக்கவில்லை. ஆகையினால் ஒரு பள்ளிக்கூடம் வைத்து நடத்த திரும்பவும் யோசித்தார். லெஸ்ற்றர் பட்டணத்தில் நல்ல புஸ்தகசாலை ஒன்று இருந்தது; அதில் அவர் போய் வாசிக்க இடம் கிடைத்தது. அவர் அநேக வேலைகள் பார்க்கவேண்டியதாயிருந்த போதிலும் அவ்வேலைகளெல்லாவற்றோடும் தம்முடைய படிப்பையும் கவனித்துவந்தார்.

1791-ம் ௵ நடத்தப்பட்ட ஓர் குருமார் கூட்டத்தில் கேரி ஐயர் அந்நிய தேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் நோக்கமாக ஓர் சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்று திரும்பவும் பேசினார். அப்போது அவர்கள் அதைப் ஒப்புக்கொள்ளவில்லை; என்றாலும் அவ்விஷயமாய் அவர் எழுதியிருந்த பத்திரிகையைப் பிரசுரஞ் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள்

அடுத்த வருஷம் நாட்டிங்காம பட்டணத்தில் கூடின கூட்டத்தில் பிரசங்கஞ் செய்தவர்களில் கேரி ஐயரும் ஒருவர். அவர் செய்த பிரசங்கம்: 'தேவன் பெரிய காரியங்களைச் செய்வார் என்று எதிர்பார்த்திருங்கள்; தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய முயலுங்கள்' என்னும் இரண்டு பிரிவுகளுள்ள பேர்போன வாசகத்தின்பேரிலேயே. அப்பிரசங்கம் மிகுந்த அனலோடும் ஊக்கத்தோடும் செய்யப்பட்டது. கூட்டம் முடியுமுன் பின்வரும் தீர்மானம் பண்ணப்பட்டது; அதென்னவென்றால், 'கெற்றரிங் என்னும் இடத்தில் அடுத்த கூட்டம் நடக்கிறதற்குள்ளாக அந்நிய ஜனங்களுக்குள் சுவிசேஷம் பிரபல்லியமாகும்படி ஓர் சங்கம் ஸ்தாபிக்கும்படியான முயற்சிகள் செய்யப்படவேண்டும்' என்பதே.

நாலு மாசத்திற்குப் பிற்பாடு 1792-ம் ௵ அக்டோபர் ௴ 2-ம் தேதியில் கெற்றரிங் ஊரிலுள்ள ஒரு வீட்டில் 12 குருமார் கூடி பேப்ற்றிஸ்டு மிஷனெரி சங்கத்தை ஸ்தாபித்து அந்திரேயா புள்ளர் ஐயரை அதற்குக் காரியதரிசியாக ஏற்படுத்தினார்கள். அக்கூட்டத்

தில் சேர்ந்த பணம் 131 ரூபாய். கேரி ஐயர் உடனே சங்கத்தார் தம்மை எந்தத் தேசத்திற்கு அனுப்ப மனமாயிருப்பார்களோ அந்தத் தேசத்திற்குத் தாம் போகத் தடையில்லை என்று சொன்னார். அப்போது வந்திருந்த குருக்களில் ஒருவராகிய சாமுவேல் பியர்ஸ் ஐயர் தம்முடைய சபையிலிருந்து 700 ரூபாய் சேகரித்து அனுப்பினார். அநேக சபையாரும் இவ்வண்ணமே பணஞ் சேகரித்து அனுப்பினார்கள். இவ்விதமாக சீக்கிரத்திற்குள் ஒரு நல்ல தொகை சேர்ந்தது.

## கேரி ஐயர் இந்தியாவுக்குப் புறப்பட்டது.

பஸிபிக் மகா சமுத்திரத்தில் கேப்ற்றன் கூக் செய்த யாத்திரைகளைப்பற்றி வாசித்ததின்பேரில் கேரி ஐயர் அச்சமுத்திர தீவுகளில் ஒன்றாகிய தாகிற்றி என்னும் தீவுக்குப் போக விருப்பமுள்ளவராய் இருந்தார். ஆனால் அம்மிஷனெரி சங்கத்தாருடைய ஒரு கூட்டத்தில் 'எத்தேசத்தில் திருவசனம் கனிவுடன் செல்லும்படியான வாசல் திறந்திருக்கின்றதாக துலங்குகின்றது?' எனப் பேசப்பட்டது. இதற்கிடையில் கேரி ஐயர், கப்பல் வைத்தியனாக இந்தியாவுக்கு 1783-ம் ஷு போய், அங்கே அநேக வருஷங்களாக வசித்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்த தோமாஸ் டாக்ற்றர் என்னும் ஒருவரைப்பற்றி கேள்விப்பட்டார். அவர் இந்தியாவில் ஒரு மிஷன் ஸ்தாபிக்கும் நோக்கமாக அப்போது இங்கிலாந்தில் பணஞ் சேகரித்துக்கொண்டிருந்தார். கேரி ஐயர் தாம் அவரோடு சேர்ந்து இருவரும் ஒன்றாக வேலை நடப்பிப்பது உத்தமம் என்று ஆலோசனை கொடுத்தார். தோமாஸ் டாக்ற்றர் அடுத்த கூட்டத்திற்கு வந்து இந்தியாவைப்பற்றிச் சில விசேஷங்கள் சொன்னார். கேரி ஐயர் அவர் சொன்னதைக் கேட்டு மிகச் சந்தோஷமடைந்து அழுதார். அப்பால் புள்ளர் ஐயர்: 'இந்தியாவில் பொன் சுரங்கம் இருக்கிறது; ஆனால் பூமியின் மத்தியம் எவ்வளவு ஆழத்திலிருக்கிறதோ அது அவ்வளவு ஆழத்திலிருக்கிறது; இறங்கி அதை வெட்டியெடுக்கும்படி உழவுபார்க்கத் துணிகிறது யார்?' என்றார். அதன்பேரில் கேரி ஐயர்: 'நான் ஆச்சுது; ஆனால் நீங்கள் கயிற்றைப் பிடித்துக்கொண்டு உதவி செய்வீர்களா?' என்று கேட்டார். அவர்கள் நல்லது என்று ஒப்புக்கொண்டார்கள்.

1793-ம் ஷு ஜனுவரி மீ 10-ம் உ கேரி ஐயரும், தோமாஸ் டாக்ற்றரும் இந்தியாவுக்குப் போகும் மிஷனெரிமாராக ஏற்படுத்தப்பட்டார்கள். தங்கள் செலவுக்கு வேண்டிய பணத்திற்குத் தாங்களே வழிவகை பார்த்துக்கொள்ளும்வரைக்கும் அவர்களிருவருக்கும், அவர்கள் குடும்பத்திற்குமாக வருஷம் 1000 ரூபாய் அல்

லது 1500 ரூபாய் கொடுப்பதாக சங்கத்தார் சொன்னார்கள். கப்பல் கூலியில் ஓர் பாகம் புள்ளர் ஐயர் சேகரித்துக் கொடுத்தார். மீதிக்கு இவர்களிருவரும் அங்கங்கே போய், பிரசங்கம் நடப்பித்து, பணஞ் சேகரித்தார்கள். ஹல் துறைமுகப்பட்டணத்தில் கேரி ஐயர் உல்லியம் உவார்ட் என்னும் அச்சு யந்திரக்காரனைக் கண்டு அவனைப் பார்த்து: 'கர்த்தர் எங்கள் வேலையை வாய்க்கச் செய்தால் உம்மைப்போல வேலை கற்றிருக்கும் ஒருவர் வேதாகமம் அச்சடிப்பதற்காக எங்களுக்கு அவசியமாயிருக்கும். அப்போது நீர் வருவீர் என்று நம்புகிறேன்' என்று சொன்னார். அப்படியே ஐந்து வருஷங்களுக்குப் பின் உவார்ட் என்பவர் வேதாகமம் அச்சடிக்கும்படி அங்கே போனார்.

1793-ம் வருஷம் மார்ச்சு மீ 20-ம் உ ஜெபஞ் செய்து அவர்களிருவரையும் மிஷனெரி வேலைக்கென்று அனுப்பினார்கள். அச்சமயத்தில் புள்ளர் ஐயர்: 'அவர்கள் மனதில் வைத்துக்கொண்டு வேலை செய்யவேண்டிய நோக்கம், அவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டிய விதிகள், அவர்கள் சகிக்கவேண்டியதாயிருக்கும் வருத்தங்கள், கடைசியாய் அவர்களுக்குக் கிடைக்கும் பிரதிபலன் முதலியவைகளைப்பற்றி' பிரசங்கஞ் செய்தார்.

கேரி ஐயர் தம்முடைய மனைவியை வெகுவாய் வேண்டிக்கொண்டபோதிலும் அவள் அவரோடு கூடப்போக சம்மதியாததே அவர்களுக்கு நேரிட்ட முதல் பெரிய தடை. இதினால் அவருக்குச் சொல்லிமுடியாத மனவருத்தம் இருந்தது; என்றாலும் தம்முடைய மூத்த மகன் பேலிக்ஸ் என்பவனைக் கூட்டிக்கொண்டு ஒண்டியாய்ப் போக தீர்மானம்பண்ணினார்.

ஆனால், அவர்களுக்கு நேரிட்ட தடைகள் எல்லாவற்றிலும் பெரிய தடை கம்பனியாரிடத்திலிருந்து நேரிட்டது. இந்தியா அப்போது கீழ் இந்திய கம்பனியார் வசம் இருந்தது. அதில் நடக்கும் வியாபாரமெல்லாம் கம்பனியாருடைய கப்பல்கள் வழியாய்த்தான் நடக்கும். ஒருவராவது அவர்கள் அநுமதியில்லாமல் இந்தியாவுக்குப் பிரயாணஞ் செய்யக்கூடாது என சட்டம் இருந்தது. இதற்கு இரண்டு முகாந்தரங்களுண்டு. அக்காலத்தில் இங்கிலாந்துக்கும் மற்ற இராஜ்யங்களுக்கும் அடிக்கடி யுத்தம் நடந்து கொண்டிருந்தபடியால் அங்கிலேயருக்குச் சத்துருக்களானவர்கள் இந்தியாவுக்கு வந்து அங்கிலேய இராஜாங்கத்துக்கு விரோதமாய் இந்தியாவிலுள்ள சிற்றரசை எழுப்பிவிடப் பிரயாசப்படலாம் என்பது ஓர் முகாந்தரம். கம்பனியாரைச் சேர்ந்தவர்களல்லாத மற்றும்பேர் இந்தியாவுக்கு வந்து வியாபாரம்பண்ணி கம்பனியாருடைய வியாபாரத்திற்கு நஷ்டம் உண்டாக்கிவிடலாம் என்பது இன்

ஞெரு மூகாந்தரம். யாராவது ஒருவர் கம்பணியாருடைய அனு மதி சீட்டு இல்லாமல் இந்தியாவுக்குப் போனால் அவர்களுக்கு அப ராதம்போட்டு சிறைச்சாலையில் வைக்கும்படி பார்லிமென்று என் னும் மகா சபையிலிருந்து சட்டம் பிறந்திருந்தது. இந்தத் தண் டனை கொஞ்சக் காலத்திற்குப் பிற்பாடு நிறுத்தப்பட்டு அப்படி உத்தரவு சீட்டில்லாமல் பிரயாணஞ் செய்கிறவர்களை இந்தியாவி லிருந்து தூரத்திவிடவேண்டுமென்று மாற்றப்பட்டது. இங்கிலாந்தி லிருந்து ஒரு கப்பல் இந்தியாவின் கரை சேர்ந்தவுடனே கப்பல் தலைவன் பிரயாணிகளின் நாமங்களை யெல்லாம் எழுதிக் கொடுப் பான். கம்பனியார் அனுமதி சீட்டு இல்லாதவர்களொருவரை யாவது கரை இறங்க விடமாட்டார்கள்.

'ஆக்ஸ்வோர்ட்' என்னும் பெயருள்ள கப்பல் தலைவன் அச் சீட்டு இல்லாமல் 2500 ரூபாய்க்கு இவ்விரு மிஷனெரிமாரையும் ஏற்றிக்கொண்டுபோகச் சம்மதித்தான். ஆனால் அவர்களை ஏற் றிக்கொண்டுபோனால் அவனைப்பற்றி பிரியாது செய்யப்படுமென்று கப்பல் புறப்படுமுன்னே எச்சரிப்பு கடிதம் ஒன்று வரவே, அத் தலைவன் அவர்களைக் கப்பலிலிருந்து இறக்கி விட்டுவிட்டான். கப்பல் கூலிக்கென்று அவர்கள் கொடுத்திருந்த 2500 ரூபாயில் 1500 ரூபாய் மாத்திரம் வாங்கிக்கொண்டு அவர்கள் இறங்கிவிட வேண்டியதாயிற்று.

இது அவர்களுக்கு மிகுந்த மனச்சோர்வை உண்டாக்கின போதிலும் கடைசியில் நன்மைக்கேதுவாகவே இருந்தது. அவர் கள் மறுபடியும் உடனே இங்கிலாந்துக்குத் திரும்பிவிட வேண் டியதாய் இருந்திருக்கும். ஆனால் இப்படி தாமதித்ததினலே கேரி ஐயர் தம்முடைய மனைவியை திரும்ப ஒருதரம் பார்க்கக்கூடியதா யிருந்தது. அவள் தன் சகோதரி கூடவந்தால் தானும் அவரோடு கூட இந்தியாவுக்குப் போவதாக இப்போது சொன்னாள். அப் போது கேரி ஐயருக்குண்டான சந்தோஷம் இம்மட்டென்றல்ல

தென்மார்க்கு தேச அரசனுக்கு அக்காலத்தில் இந்தியாவில் இரண்டு சிறு நாடுகள் இருந்தது. அவன் கப்பல்களுக்கும் இந் தியாவோடு வியாபாரஞ் செய்ய அனுமதி இருந்தது. ஆகவே, இக்கப்பல்கள் ஒன்றில் 3150 ரூபாய் கொடுத்து இவ்விரு மிஷ னெரிமாரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் இந்தியாவுக்குப் புறப் படக்கூடியதாயிருந்தது. கப்பல் பிரயாணம் மூடிய 5 மாதம் சென் றது. அதற்கிடையில் கடும் புசல்களும் இருந்ததுண்டு. கேரி ஐயர் அவ்வளவு காலத்தையும் முக்கியமாய் வங்காளபாஷை படிப்பதி லேயே செலவழித்தார். கல்கத்தாவைக் கிட்டிச் சேரவே சுவி சேஷத்தைப் பிரபல்லியம் பண்ணவேண்டுமென்ற ஆவல் அவருக்

குள் அதிகரித்தது. புள்ளர் ஐயருக்கு எழுதுகையில் 'ஆப்பிரிக்கா இங்கிலாந்துக்குக் கொஞ்சதூரத்தில்தான் இருக்கிறது; மதகாஸ்கார் தீவு அதற்குச் சற்று அப்பால் இருக்கிறது. அங்கு பிரயாணஞ் செய்யும்போது தென் அமெரிக்கா, இந்திய சீனக் கடல்களிலிருக்கும் ஏராளமான தீவு முதலியவைகளை நான் கடந்துபோக வேண்டியதாயிராது என்று நினைக்கிறேன். வேலை நடப்பிப்பதற்கு எப்பக்கத்திலும் நல்ல இடம் இருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் திராட்சத் தோட்டத்தில் வேலை செய்யப் போவதற்கு அநேகர் ஏவப்படுவார்களாக. கிறிஸ்துவைப்பற்றிய சத்திய அறிவுக்குப் புறஜாதியார் யாவரும் கொண்டுவரப்படுவார்களாக' என்று எழுதினர்.

## இந்தியாவில் முதலாவது அவர் செலவிட்ட வருஷங்கள்.

கேரி ஐயர் 1793-ம் ஹூ நவம்பர் மீ 11-ம் உ இந்தியாவில் வந்து சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது 33. ஸர் ஜான் ஷோர் அப்பொழுது கவர்னர் ஜெனரலாய் இருந்தார். கூடார வேலை செய்து பிழைத்து வந்த அப்போஸ்தலனாகிய பவுலைப்போல கேரி ஐயரும் தாமே கையினல் வேலைசெய்து பிழைப்புக்கு வழி பண்ணிக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார். முதலில் அவர் அநேக வருத்தங்களைச் சகிக்கவேண்டியதாயிருந்தது. அவர் மனைவி தன்னை இப்படிப்பட்ட தேசத்திற்குக் கூட்டிக்கொண்டு வந்ததற்காக முறுமுறுத்து அவரை நிந்தித்துப் பேசினள். இது அவருடைய வருத்தத்தை அதிகரித்தது. கடைசியாக, சண்டர்பன்ஸ் என்னும் தீவுகளில் ஒரு சிறு குடிசை கட்டி, அதில் நிலத்தைப் பயிரிட்டுத் தானும் தன் குடும்பமும் பிழைக்கலாம் என்று யோசித்து அங்கே போனர். அவ்விடத்தில் யாதொரு தீர்வை யில்லாமல் சில வருஷங்களுக்குப் பயிரிடும்படி நிலம் சும்மா கிடைக்கக்கூடியதாயிருந்தது. அவ்விடமோ காடு அடர்ந்ததாயும், புலிகள் பெருத்ததாயும் இருந்தது. துவக்கத்தில் அவருடைய நேரமெல்லாம் வீடு கட்டுவதிலும் பயிரிடுவதிலுந்தான் கழிந்தது. ஆனல், கொஞ்சக் காலத்திற்குப் பின் பிரசங்கஞ் செய்வதற்குத் தமக்கு அதிக நேரங் கிடைக்குமென்று எண்ணினர். மழைகாலம் துவக்கினபின் அவர் அந்தச் சதுப்புநிலத்தில் வசியாதது அவருக்கு நன்மையாய் இருந்தது. ஏனென்றால், மற்றப்படி அவரும் அவருடைய மனைவி பிள்ளைகளும் ஜுரத்தினல் மாண்டுபோயிருப்பார்கள். ஆனல் கல்கத்தாவுக்கு 160 மைலுக்கு வடக்கே இருக்கும் மால்டா என்னும் ஜில்லாவிலுள்ள முதனபட்டி ஊரில் நீலம் உண்டாக்கும் ஓர் தொழிற்சாலையை மேல்பார்க்கும் உத்தியோகம் அவருக்குக் கிடைக்

கவே, அவர் அவ்விடத்தை விட்டு அங்கே போனார். அவ்விடத்தில் மாதம் 200 ரூபாய் சம்பளமும் விற்ற சாமான்களில் ஓர் கமிஷனும் கிடைத்தது. இது 1794-ம் ௵ ஜூன் ௴ நடந்தது. உடனே கேரி ஐயர் தன் வகைச்செலவு காரியத்தைத் தான் பார்த்துக்கொள்வதாகவும், தனக்குச் சம்பளமாகக் கொடுத்துவந்த பணத்தை வங்காளபாஷையில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து அச்சிடுவதற்குச் செல்லும் செலவுக்காக சேர்த்துவைக்கவேண்டுமென்றும் இங்கிலாந்திற்கு எழுதியனுப்பினார்.

முதனைபட்டி நீலத்தொழிற்சாலையில் கேரி ஐயர் 5 வருஷம் வேலைபார்த்துவந்தார். அதிலே சில மாசங்கள்தான் வேலை இருந்தது. ஆகவே, வங்காளபாஷையைக் கற்றுக்கொள்ளவும், புதிய ஏற்பாட்டை அப்பாஷைக்கு மொழிபெயர்க்கவும், பிரசங்கம் நடப்பிக்கவும் போதுமான நேரம் அவருக்குக் கிடைத்தது. இங்கிலாந்தில் இருந்தபோது கேரி ஐயர் மிகுந்த பிரியத்தோடு செடிகள் நட்டு தோட்டம பயிர்செய்துவந்தார் என்று பார்த்தோம். அப்படியே முதனைபட்டியில் இருக்கும்போதும் பயிரிடும் வேலையில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டு பயிரிடுவதற்கு உபயோகிக்கும் மண்வெட்டி முதலிய ஆயுதங்கள்மாத்திரமல்ல, வருஷந்தோறும் பற்பல வகையான விதைகளும் இங்கிலாந்திலிருந்து வருத்திப் பயிரிட்டுவந்தார். ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார். வேதாகமத்திலுள்ள அநேக புஸ்தகங்களை மொழிபெயர்த்தார். வங்காளபாஷையில் ஒரு சிறு அகராதியும் இலக்கணமும் எழுதினார்.

அவரிருந்த இடம் சுகத்திற்கு ஏற்ற இடமல்லாததால் அவருக்கு கடுஞ் சுரம் கண்டது. என்றாலும், அவர் அதிலிருந்து சுகமானாலும் 5 வயது பிராயமுள்ள அவருடைய கடைசி மகன் இறந்து போனான். குழந்தை இறந்துபோனதினால் உண்டான துக்கத்தினால் கேரி ஐயர் மனைவிக்கு புத்திமாறாட்டம் உண்டாகிவிட்டது.

கேரி ஐயர் அப்பால் சமஸ்கிருதம் படிக்கத்தொடங்கி மகா பாரதத்தில் மிச்சமான பாகம் வாசித்தறிந்தார். சமஸ்கிருத பாஷையிலுள்ள இலக்கண நூலையும் அகராதியையும் இங்கிலீஷ் பாஷையில் திருப்பினார். சமஸ்கிருதம், இங்கிலீஷ், வங்காள முதலிய பாஷைகள் அடங்கிய ஓர் அகராதி செய்வதற்கு மிகவும் முயற்சி எடுத்தார். ஒரு முனிஷியை வைத்துக்கொண்டு வேதாகமம முழுவதையும் வங்காளபாஷையில் திருப்பினார். மரத்தினால் செய்த அச்சுயந்திரமொன்றை அச்சடிக்கும்படியாக கல்கத்தாவிலிருந்து 400 ரூபாய்க்கு வருத்தினார். ஒரு இரும்பு யந்திரத்திற்காக இங்கிலாந்துக்கு எழுதினார். ஏழைகள் விஷயமாய் மருந்துக்கும் மிகுந்த பணஞ் செலவுசெய்தார்.

பயிர்கள் தவறிப்போனபடியினாலும், மிகுந்த ஜலப்பெருக்குகளினாலும் மற்றும் கஷ்டங்களினாலும், முதனபட்டியிலுள்ள நீலச் சாலையின் வேலையை நிறுத்திப்போடவேண்டியதாயிற்று. கேரி ஐயர் அதற்குச் சற்று அப்பால் தம்முடைய சொந்தச் செலவில் ஓர் சாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று பிரயாசப்பட்டார். ஆனால், சிராம்பூருக்குப் போகவேண்டியதாய் இருந்தபடியினால் அம்முயற்சியை விட்டுவிட்டார்.

ஐரோப்பியரில் எவர்களையாவது கம்பனியார் தங்கள் வேலையில் அல்லாமல் மற்றும்விஷயமாய் இந்தியாவுக்கு அக்காலத்தில் வரவிடுகிறதே இல்லை. மிஷனெரிமாரை முக்கியமாய் வரவிடாதது, அவர்கள் வந்து கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் நடப்பித்தால் கலகம் இருக்கும் என்று யாதொரு நிமித்தமில்லாமல் கம்பனியார் நினைத்தார்கள். ஆதலால் அவருக்கு உதவியாக இன்னும் நாலு மிஷனெரிமார் வரும்படி இருந்ததால் அவர்கள் தாங்கள் கல்கத்தாவுக்கு 13 மைலுக்கு அப்பாலிருக்கும் சிராம்பூரில் வசிப்பது உத்தமமெனக் கண்டார்கள். ஏனென்றால், அப்பட்டணம் அப்போது தென்மார்க்கு தேச அரசன் வசத்தில் இருந்தது. அவன் நாட்டில் மிஷனெரிமார் தாராளமாய்ப் பிரசங்கிக்கலாம். ஆகையால் அந்த நான்கு மிஷனெரிமாரும் கல்கத்தாவில் இறங்காமல் நேரே சிராம்பூருக்குப் போய் அங்கேயே இறங்கினார்கள். அப்பட்டணத்துக் கவர்னர் தென்மார்க்கு தேசத்தான். அவர் முன் சுவாட்ஸ் ஐயர் கையின்கீழ் கற்றவர். ஆதலால் அவர் அம்மிஷனெரிமாருக்கு மிகவும் தயை பாராட்டினதுமன்றி அவர்களுக்கு யாதொரு அபாயமும் நேரிடாதபடி பார்த்துக்கொள்வதாகவும் வாக்குக் கொடுத்தார். 1800-ம் ஆு ஜனுவரி மீ 10-ம் உ கேரி ஐயரும் அவருடைய மனைவி பிள்ளைகளும் சிராம்பூர் வந்து சேர்ந்தார்கள்.

## சிராம்பூர் மிஷன்.

சிராம்பூருக்குப் புதிதாய் வந்த மிஷனெரிமாரில் இரண்டு பேர் கொஞ்ச காலத்திற்குள்ளாக மரித்துப்போனார்கள். மற்ற இரண்டு பேரில் ஒருவர் உல்லியம் உவார்ட் என்ற அச்சுயந்திரக்காரன். 'இந்தியாவில் உம்முடைய வேலை வேண்டியதாயிருக்கும்' என்று கேரி ஐயர் முன் சொன்னது இவரிடத்தில்தான். கேரி ஐயர் தமக்கு உதவியாக சிலர் வேண்டுமென்று கேட்டதின்பேரில் சங்கத்தார் உவார்ட் துரையை அனுப்புவது உத்தமமென்று கண்டார்கள். இவரைச் சங்கத்தார் தங்கள் வேலையில் எடுத்துக்கொண்ட 1798-ம் வருஷத்தில் கேரி ஐயருக்கு உதவியாக வந்த மற்றவர் யோசுவா மார்ஷ்மன் என்பவர். இவர் சிறு பிராயமுதலே படிப்

பில் அதிக பிரியமுள்ளவராயிருந்தார். 12 வயது பிராயமாகுமுன் ஸமேஸ் மில்ற்றன் புலவர் எழுதிய பூங்காவனப் பிரளயம் முதலிய புஸ்தகங்களோடு மற்றும் நூற்றுக்கணக்கான புஸ்தகங்களும் வாசித்திருந்தார். 15 வயதாயிருந்தபோது லண்டன் பட்டணத்திற்குப் போய் அங்கே ஒரு புஸ்தகக் கடைக்காரனிடத்தில் மூட்டை சுமக்கும் வேலையில் அமர்ந்தார். இவ்வேலை அவருக்குப் பொருந்தாததினால் சீக்கிரத்திற்குள்ளாகத் தம்முடைய வீட்டிற்குத் திரும்பிப்போய்த் தகப்பனுருடைய வேலையில் அவருக்கு உதவிசெய்து வந்தார். 1791-ம் வருஷம் அவர் அன்னாள் ஷெப்பர்டு என்னும் பெயருள்ள ஒரு அம்மாளை கலியாணஞ் செய்தார். மூன்று வருஷத்திற்குப் பிற்பாடு ஓர் பள்ளிக்கூட வேலை பார்த்துவந்தார். போதக ஊழியத்திற்கென்று வாசித்துக்கொண்டிருக்கும் காலத்தில், கேரி ஐயர் இந்தியாவிலிருந்து எழுதுங் கடிதங்களை வாசித்து, தாம் சுவிசேஷகனாகிறதற்கு என்ன தடை இருக்கிறது என்று யோசித்துப் பார்க்கவே, தம்மையும் ஒரு மிஷனெரியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டதின்பேரில் அவரை எடுத்துக் கொண்டார்கள்.

சிராம்பூரில் செலவு சுருங்கும்படியாக எல்லா மிஷனெரிமாரும் ஒன்றாக வசிக்கும்படி தீர்மானஞ் செய்துகொண்டார்கள். ஆனால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொஞ்சப் பணம் தனது செலவுக்காக கொடுக்கப்பட்டது. அதுவுமன்றி ஒருவரும் தங்கள்பாட்டில் சொந்த வியாபாரஞ் செய்யக்கூடாது என்றும், எல்லாரும் தங்கள் வருமானத்தைப் பொதுவாக வைத்து அனுபவித்துவரவேண்டும் என்றும் ஒழுங்குபண்ணிக்கொண்டார்கள். அவர்களுடைய மனதிலுண்டான எண்ணம் இன்னதென்று பின்வரும் வார்த்தைகளினால் அறியலாம்.

'இந்த மகிமையான வேலைக்கு நம்மை முழுவதுமாக ஒப்புக் கொடுப்போமாக. நம்முடைய நேரம், நமக்குக் கிடைத்திருக்கும் சலாக்கியங்கள், நம்முடைய பெலன், நம்முடைய மனைவி மக்கள், நாம் உடுத்தியிருக்கிற வஸ்திரங்கள் முதலாய் நம்முடையவைகள் அல்லவென்று எப்போதும் நினைப்போமாக. அவைகளெல்லாவற்றையும் பராபரனுக்கென்றும் அவருடைய மகிமைக்கென்றும் பிரதிஷ்டை பண்ணுவோமாக. ஆ! கடவுள் இவ்வேலைக்கென்று நம்மைப் பரிசுத்தப்படுத்துவாராக. நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் ஒரு காசு முதலாய் மிச்சம்பிடித்து வைக்கவேண்டுமென்ற எண்ணத்தை முற்றுமாய் விட்டுவிடுவோமாக. கடவுள் நமக்கு ஈவாக கொடுத்திருக்கும் தேகம், சுகம், ஜீவன் யாவற்றையுங் கொண்டு நாம் அவருடைய மகிமைக்காக உழைப்போமென்றால் நமக்குத் தேவையான காரியங்களை அவர் பார்த்துக்கொள்ளுவார்.'

வீட்டு வாடகை மிகவும் உயர்ந்த தாரிப்பாயிருந்தபடியினால் அவர்களெல்லாரும் ஒன்றாய் வசிக்கத்தக்கதான ஒரு வீட்டைக் கிரையத்திற்கு வாங்கினார்கள்.

சீர்மையிலிருந்துவரும் பணம் முழுவதையும் பள்ளிக்கூட விஷயமாயும், வேதாகமம் அச்சிடும் விஷயமாயும் செலவு செய்யக்கருதி தங்கள் சவரக்ஷணைக்கு வேண்டிய பணத்தைத் தாங்களே வேலை செய்து சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்று விரும்பினார்கள்.

அச்சுயந்திரக்காரனாகிய உவார்ட் என்பவரிடம் அச்சுக்கூட வேலையைக் கொடுத்தார்கள். கேரி ஐயர் முதனபட்டியில் இருந்த போது ஓர் மர அச்சுயந்திரம் வாங்கி வைத்திருந்தார். வங்காள பாஷை அச்சுருப்புகள் வேண்டியதாயிருந்தது. முதலாவதாக உபயோகித்த வங்காளபாஷை அச்சுருப்புகள், பாகவதகீதத்தை இங்கிலிஷ் பாஷையில் மொழிதிருப்பின ஸர் சூார்ல்ஸ் உவில்கின்ஸ் என்பவர் தம்முடைய சொந்தக் கைகளினால் வெட்டினவைகள். பின்பு கெட்டிக்காரனை ஓர் கொல்லனுக்குக் கற்றுக்கொடுத்தார். அவனிடத்திலிருந்து வங்காளத்திலுள்ள சிலர் இவ்வேலையைக் கற்றுக்கொண்டார்கள் முதலிலே சில கிறிஸ்துமார்க்க ஞானப்பாட்டுகளையும், பிற்பாடு பாட்டாக எழுதியிருந்த 'சுவிசேஷ துதிகை' என்னும் ஓர் சிறு பத்திரிகையையும் அச்சடித்தார்கள். 1801-ம் ஞு பெப்ருவரி மீ 7-ம் உ புதிய ஏற்பாடு வங்காளபாஷையில் அச்சடிக்கப்பட்டது.

வேதாகமம் அச்சடிக்கும்படியாகத்தான் அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப்பட்ட முக்கிய நோக்கமே. ஆனால், உவார்ட் என்பவர் அவ்வேலையில் மிகவும் நிபுணராயிருந்தபடியினாலும் அச்சடிக்கும் கூலி மிகவும் உயர்வாயிருந்தபடியினாலும் நாளடைவில் அச்சுக்கூடத்தினால் வருஷத்திற்கு அநேகமாயிரம் ரூபாய் வருமானம் வந்தது.

1800-ம் ஞு மார்ஷ்மன் ஐயரும் அவர் துரைசானியும் மிஷன் விஷயமாய்ச் சற்று உதவியாயிருக்கும்படி இரண்டு போர்டிங் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தார்கள். அவ்வருஷம் முடிவதற்குள்ளாக அவ்விரண்டு பள்ளிக்கூடங்களினாலும் 300 ரூபாய் கிடைத்தது. அப்பள்ளிக்கூடங்கள் மிகுந்த கீர்த்திப்பிரதாபம் பெற்று பிந்தின வருஷங்களில் அதிக வருமானம் கொடுத்துக்கொண்டிருந்தன.

உவெல்லெஸ்லி பிரபு அப்போது கவர்னர் ஜெனரலாயிருந்தார்; கம்பனியாருடைய உத்தியோகஸ்தர்கள் துவக்கத்தில் வியாபாரஞ் செய்வதிலேயே முற்றிலும் முயற்சியுள்ளவர்களாய் இருந்தார்கள். இப்போதோ தேசத்தின் துரைத்தன விஷயமாயும் பொறுப்பான வேலைகள் அவர்கள் பார்க்கவேண்டியதாயிருந்தது. ஆதலால் உவெல்லெஸ்லி பிரபு இரண்டு வருஷத்திற்குள்ளாக அவர்


மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

கள் பாஷை கற்றுக்கொள்ளவும் தேச சட்டப்பிரமாணத்தை அறிந்துகொள்ளவும்தக்கதாக கல்கத்தாவிலுள்ள உல்லியம என்னும் கோட்டையில் ஓர் வித்தியாசாலை ஸ்தாபித்தார். அக்காலத்திற்கு முன் மகமதியர் அரசு புரிந்த காலத்தில் பாரசீக பாஷைதான் நியாயஸ்தலங்களில் வழங்கும் பாஷையாயிருந்தது. ஆகவே, சிவில் உத்தியோகஸ்தர்கள் பாரசீக பாஷையைக் கற்றிருந்தார்கள். ஜனங்களுடைய சுதேசபாஷையோ அவர்களுக்குத் தெரியவில்லை. உவெல்லெஸ்லி பிரபு வங்காளபாஷையையும் அவர்கள் கற்றிருக்கவேண்டுமென்று முதலாவதாக சட்டம் ஏற்படுத்தினார். அப்பாஷையைக் கற்றுக்கொடுக்கத்தக்க திறமையுள்ள வேறு ஐரோப்பியர் ஒருவருமில்லாததால், கேரி ஐயர் 1801-ம் வருஷத்தில் அக்காலேஜில் முன்ஷியாக நியமிக்கப்பட்டார். முதலாவதாக அக்காலத்தில் வசனநடையாக எழுதப்பட்டிருக்கும் படிப்பிக்கிறதற்கேற்ற புஸ்தகம் யாதொன்றாகிலும் வங்காள பாஷையில் கிடையாது. சமஸ்கிருத பாஷை கற்றிருந்த அநேக வித்துவான்கள் இருந்தபோதிலும் அவர்கள் ஒருவராவது ஜனங்கள் பேசும் பாஷையை விருத்திபண்ண சற்றாவது கரிசனை எடுக்கவில்லை. கேரி ஐயர் பிரதாபாதித்தியன் என்னும் அரசன் சரித்திரத்தை வசனநடையில் எழுதி சிராம்பூர் அச்சுக்கூடத்தில் 1801-ம் வருஷம் ஜூலை மீ பிரசுரஞ்செய்தார்; சன்மார்க்கப் பிரதிகளையும் சட்டப் புஸ்தகங்களையும் தவிர வங்காள பாஷையில் முதலாவதாக வசனநடையில் அச்சடிக்கப்பட்ட புஸ்தகம் இப்புஸ்தகந்தான் என்று சொல்லலாம். இப்பொழுதோ வங்காள பாஷையில் ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றதைப் பார்க்கலாம்.

பிற்பாடு, கேரி ஐயர் அந்த வித்தியாசாலையில் சமஸ்கிருத உபாத்தியாயராகவும் நியமிக்கப்பட்டார். என்றாலும் இதற்காக அவருக்குச் சம்பளம் கூட்டிக்கொடுக்கவில்லை. இவ்வேலையினால் அவர் சமஸ்கிருத இலக்கணம் ஒன்று செய்வதற்கு இடம் உண்டாயிற்று. சில வருஷங்களுக்கு முன்னே ஒரு அகராதி எழுத ஆரம்பித்திருந்தார். ஏழு வருஷக் காலமாக தம்முடைய நேரத்தில் மூன்றிலொரு பாகத்தை சமஸ்கிருதபாஷை கற்கும்படியாக செலவிட்டு வந்தார்

முதல் மூன்று வருஷப் படிப்பு முடிந்தவுடனே உவெல்லெஸ்லி பிரபு, பளிங்கு கற்களால் கட்டப்பட்டிருந்த கவர்னர் மாளிகை மண்டபசாலையில் வித்தியாசாலையிலிருந்து தேறி வெளியேறும் மாணாக்கர்களும் அவர்களுடைய வித்தியாபாரகர்களும் பற்பல தேச பாஷைகளில செய்யும் தர்க்கங்களையும் வாய்ச்சாலங்களையும் கேட்டுக்கொண்டிருந்தார். கேரி ஐயர் சமஸ்கிருத பாஷையில் உவெல்

லெஸ்லி பிரபுவுக்கு ஓர் சுபமங்கள வாழ்த்துதல் சொல்லி கூட்டத்தை முடித்தார். அதற்கு இரண்டு தினத்திற்குப் பிற்பாடு, முன்போலொத்த ஒரு கூட்டம் வைத்து உவெல்லெஸ்லி பிரபு தேறின மாணுக்கர்களுக்கு விருதுகள் கொடுத்தார். பின்னும் உவெல்லெஸ்லி பிரபு 'சுயமும் சீர்த்தியுமான மா கருத்துகள் அடங்கிய கேரி ஐயருடைய பிரசங்கத்தின் பேரில் எனக்கு மிகவும் பிரீதியுண்டு; நியாயஸ்தலங்கள், பார்லிமென்று முதலிய பெரிய சபைகளிலிருந்து எனக்குக் கிடைக்கும் புகழ்ச்சிகளைவிட இப்பேர்ப்பட்ட ஒருவர் கொடுக்கும் புகழ்ச்சியை நான் மிகவும் நன்குமதிக்கிறேன்' என்று ஒருவருக்கு எழுதியனுப்பினார்.

## முதலாவது கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்தவர்கள்.

சிராம்பூரில் வசித்துவந்த கேரி, மார்ஷ்மன், உவார்ட் என்னும் மூன்று மிஷனெரிமாரும் கொஞ்சக் காலத்திற்குள்ளாக மிகுந்த திரவியம் சம்பாதித்துவிட்டார்கள். கேரி ஐயர் காலேஜில் கல்வி புகட்டும் வித்தியாபாரகராய் இருந்தது மாத்திரமல்ல, இராஜாங்கத்துக்கு வங்காளபாஷை மொழிபெயர்க்கிறவருமாய் இருந்தார். ஆகவே, அவருக்கு மொத்தம் 1200 ரூபாய் சம்பளம் மாதந்தோறும் கிடைத்தது. இதில் 50 ரூபாய் மாத்திரம் தம்முடைய சொந்தச் செலவுக்கு எடுத்துக்கொண்டு மீதியை யெல்லாம் மிஷியோன் வேலைக்காகவும் பள்ளிக்கூட வேலைக்காகவும் கொடுத்துவிடுவார். போர்டிங் பள்ளிக்கூடங்களிலிருந்து மார்ஷ்மன் ஐயருக்கு மாதம் 800 ரூபாய் கிடைக்கும் அதில், அவர் தமக்கும் தம்முடைய குடும்பத்திற்கும் 50 ரூபாய் மாத்திரம் எடுத்துக்கொள்ளுவார். கலாசாலைக்கும், கவர்ண்மென்று ஆபீசுக்கும் போகும்போது அந்தஸ்தாய் உடை தரித்துக்கொண்டு போகவேண்டியதா யிருந்ததால், கேரி ஐயர் மற்றவர்களைவிட சற்று அதிக பணம் செலவுக்கு எடுத்துக்கொண்டார். அச்சுக்கூட வேலையினால் உவார்ட் என்பவரும் 500 ரூபாயும் சிலவேளைகளில் சற்று அதிகமும் சம்பாதிப்பார் என்று சொல்லலாம். ஆனல், தம்முடைய செலவுக்கென்று அவர் அதில் 20 ரூபாய்தான் எடுத்துக்கொள்ளுவார்.

இம்மிஷனால் கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்த முதல் மனுஷன் கிருஷ்ண சுந்தரபாலன் என்னும் பேருள்ள ஒரு தச்சன். தற்செயலாக அவன் வைத்திய மிஷனெரியாக வந்திருந்த தோமாஸ் ஐயரிடம் போனான். அவன் முன்னமே சுவிசேஷத்தின் நற்செய்தியைப்பற்றிக் கேள்விப்பட்டு, தன் பாவ நிலைமையையும் உணர்ந்தவனாய் இருந்தான். இயேசுகிறிஸ்துவானவர் எல்லாருக்கும் மீட்பைக் கொடுப்பார் என்று அவனுக்கு தோமாஸ் ஐயர் தெளிவாய்க்

காட்டினார். இன்னும் அதிக அறிவு உண்டானபின் ஜாதிவேற்றுமை பாராமல் மிஷனெரிமாரோடு சாப்பிட்டான். இதை ஜனங்கள் அறிந்தபோது அவனை இம்சைப்படுத்தி, அடித்து, தென்மார்க்கு தேசத்தாருடைய அவ்வூர் நியாதிபதியினிடத்தில் இழுத்துக்கொண்டுபோனார்கள். அவரோ அவன்பேரில் செய்யப்பட்ட பிரியாதை தள்ளி, அவனுடைய செய்கையைப்பற்றி வியந்து கொண்டார். சில நாட்களுக்குப்பின் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இவைகளெல்லாம் சம்பவித்தது 1802-ம் வருஷம். கிருஷ்ணன் ஒரு பாட்டு கட்டினான். அப்பாட்டு இங்கிலீஷ் பாஷைக்குத் திருப்பப்பட்டு, இங்கிலாந்து தேசத்தில் அநேக கோயில்களில் இப்போதும் பாடப்பட்டுவருகிறது. அதின் பொருளாவது:-

1 மறவாதே என் நெஞ்சமே
உன்பாவம் தீர்த்த நேசனை ;
மறவாதே என் ஆத்மமே
உன் சிலுவை சுமந்தோனை.

2 இயேசு உன் ரூபமதானார்,
உன் பாவக்கட்டு நீக்கினார்,
உன் பாவக்கடன் போக்கினார்,
இவ்வன்பை நீ மறந்தாயோ.

3 துக்கத்தோடுன் பாவத்தை
அவரிடம்போய் ஒத்துக்கொள் ;
உன் வாழ்வுக்காய் மரித்தோனை
எப்பொழுதும் நினைத்துக்கொள்.

4 மட்டற்ற உண்மை தயாளமும்
அவரில் விளங்கிற்றன்றோ ;
பாவம் நெருங்கி நிற்க, நீ
அவனை மறக்கலாமோ?

5 ஆ! உயிர் போகுமட்டிற்கும்,
அவரின் இன்ப நாமமே
என் நெஞ்சை சந்தோஷிப்பிக்கும்;
என் ஆத்துமாவைத் தேற்றுமே.

6 லௌகீக இன்பம் வேடிக்கை
சகலமும் அழிந்துபோம்;
என் நேசரின்ப நாமமோ
நித்தியம் நிலைத்திருக்கும்.

முதலாவது ஞானஸ்நானம் பெற்ற வங்காள ஸ்திரீ கிருஷ்ணன் மனைவியின் சகோதரியாகிய ஜெயமுனி என்பவள். அவன் மனைவி இராசும் சீக்கிரத்திற்குள்ளாக கிறிஸ்தவளானாள்; இவர்கள் இருவரும் உத்தேசம் 35 வயது பிராயமுள்ளவர்கள். 'உலகத்திலுள்ள எல்லா பொக்கிஷங்களைப் பார்க்கிலும் பெரிய பொக்கிஷத்தைக் கிறிஸ்துவில் நான் கண்டுபிடித்திருக்கிறேன்' என்று ஜெயமுனி சொன்னாள். முதலாவதாக ஞானஸ்நானம் பெற்ற விதவை உன்னாள் என்பவள். அப்போது அவளுக்கு 45 வயது. அவளும் ஜெயமுனியும் உடனே கிறிஸ்து இரட்சகனைப்பற்றித் தங்கள் தேசத்து ஸ்திரீகளுக்குச் சொல்லத் தொடங்கினார்கள்.

கணக்கன் வகுப்பைச் சேர்ந்த 40 வயது பிராயமுள்ள பித்தம்பர் சிங் என்பவன் 30 வருஷக் காலமாக பாவத்தினின்று விடுதலைபெறும்படி அநேக இந்துமத புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை பண்ணினாலும் பாவம் போகத்தக்கதான யாதொரு வழிவகையையும் கண்டுபிடியாமல் திகைத்துக்கொண்டிருக்கையில், சிராம்பூர் அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்ட சன்மார்க்கப் பிரதி ஒன்றைக் கண்டு வாசித்தான். உடனே அவன் அதில் எழுதியிருந்த விஷயத்தைப்பற்றி நன்றாய் அறிந்துகொள்ளும்படியாக 40 மையில் தூரம் நடந்து அதை எழுதினவராகிய கேரி ஐயரிடத்தில் கேட்கும்படி போனான். அங்கே அவன் ஞானஸ்நானம் பெற்று கேரி ஐயருக்குப் பள்ளிக்கூட வேலையில் மிகவும் உதவிசெய்கிறவனானான். முதலாவதாக ஜனங்களுக்குப் போதிக்கும்படியாகப் போனவனும் அவன்தான். மகமதுமார்க்கத்திலிருந்து முதலாவதாக கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்தவன் பேறு என்பவன் முதல்முதல் கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்த பிராமணன் கிருஷ்ண பிரசாதன். 1804-ம் வருஷம் இன்னும் இரண்டு பிராமணரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் அவ்வருஷ முடிவிலே ஆணும் பெண்ணுமாக 40 பேர் கிறிஸ்தவர்களாகி இருந்தார்கள்.

முதல் கிறிஸ்தவனான கிருஷ்ணன் முதல் வேலையாக தன் வீட்டிற்கு எதிரே ஒரு சிறு பிரசங்க அறை கட்டி அதில் ஒரு பீடமும் செய்து வைத்தான். அதிலிருந்துதான் கேரி ஐயர் கிருஷ்ணன் குடும்பத்தாருக்கும் மற்றும் 20 பேருக்கும் முதலாவதாக பிரசங்கஞ் செய்தார். 1810-ம் வருஷம் 300 கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அவர்களில் 105 பேர் அந்த வருஷத்தில் மாத்திரம் கிறிஸ்தவர்களானவர்கள்.

சிராம்பூரில் வசித்து வந்த மிஷனெரிமாரின் சம்பாத்தியத்தைக் கொண்டும், இங்கிலாந்திலிருந்து வந்த பணத்தைக்கொண்டும் பற்பல இடங்களில் மிஷியோன் ஸ்தானங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்துஸ்தானத்திலிருந்த முக்கிய மிஷன் ஸ்தானங்கள்

பாட்னு, காசி, ஆக்ரா, டில்லி முதலியவை. 1813-ம் ௵ கம்பனியாருடைய அதிகாரப்பத்திரம் புதிப்பிக்கப்பட்டபோது உயில்பர் வோர்ஸ் முதலிய ஆலோசகாரிகள் பார்லிமெண்டென்னும் மகா சபையில் பேசி, மிஷனெரிமார் இந்தியாவுக்குப் போகலாம் என்னும் அனுமதி பெற்றார்கள். அதன்பின்தான் மிஷனெரிமார் இந்தியாவுக்கு வர இடம் உண்டாயிற்று

## அச்சுக்கூடமும் மொழிபெயர்ப்பும்.

ஒரு பழ அச்சுயந்திரம் 400 ரூபாய்க்கு வாங்கியிருந்தது என்றும் சில வங்காளபாஷை அச்சுறுப்புகள் வெட்டி வைத்திருந்தது என்றும் முன் பார்த்தோம். இந்த அச்சுயந்திரத்தைக்கொண்டுதான் புதிய ஏற்பாடு முதலாவது வங்காளபாஷையில் அச்சடிக்கப்பட்டது. இருப்பினும் செய்யப்பட்ட நல்ல அச்சுயந்திரங்கள் பிற்பாடு வந்தது. ஸார் சார்ல்ஸ் உல்க்கின்ஸ் என்பவர் அச்சுறுப்புகள் வெட்டும்படி கற்றுக்கொடுத்திருந்த பஞ்சானன் என்னும் கொல்லன், மிஷனெரிமார் சிராம்பூருக்கு வந்து வாசம்பண்ணி சிறிது காலத்திற்குள்ளாக அவர்களிடம் வேலைக்காக வந்தான். கேரி ஐயர் அப்போது ஒரு சமஸ்கிருத இலக்கணம் தயார்செய்துகொண்டிருந்தார். அதை அச்சிடுவதற்கு நாகிரி அச்சுறுப்புகள் வேண்டியதாயிருந்தது. பஞ்சானன் அச்சுறுப்புகளை வெட்டும்பொழுது ஏறக்குறைய 700 அக்ஷரங்கள் வேண்டியதாயிருக்கபடியினால் மனோஹரா என்னும் கெட்டிக்காரனான இன்னொரு கொல்லன் அவனுக்கு உதவியாக வந்தான். இந்த நாகிரி அச்சுறுப்புகள்தான் இந்தியாவில் முதலாவது வெட்டப்பட்ட அச்சுறுப்புவர்க்கங்கள். சிராம்பூர் அச்சுக்கூடத்தில் மனோஹார் என்பவன் 40 வருஷக் காலமாக வேலை செய்துவந்தான். முதலில் வெட்டின வங்காளபாஷை அச்சுறுப்புகள் பெரியவைகள்; ஆதலால் பஞ்சானன் என்பவன் இன்னும் இரண்டுதரமான அச்சுறுப்புகள் வெட்டி வைத்தான். அவைகள் சிறிதாயும் பார்க்கிறதற்கு அலங்காரமாயும் இருந்தன. பின்னும் ஊரியா, பாரசீகம், அரபி, சிங்களம், சீனம் முதலிய பாஷைகளிலும் அச்சுறுப்புகள் வெட்டினான்.

மனோஹார் என்பவன் கடைசிவரைக்கும் இந்துமதத்தானாய் இருந்தான். அச்சுறுப்புகள் வெட்டும்போது அவனுக்குப் பிரியமான அவனுடைய விக்கிரகத்திற்கு அடியில் குந்தி இருந்துகொள்ளுவான். அந்த விக்கிரகந்தான் தன்னைப் பாதுகாக்கிறதென்று நினைத்து அது பக்கத்திலில்லாமல் வேலை செய்யமாட்டான். 1860-ம் ௵ வரை சிராம்பூர் கீழ்தேசத்தவர் பாஷைகளின் அச்சுறுப்புகள் வார்க்கும் முக்கிய ஸ்தானமாயிருந்தது.


ஸிராம்பூர் காகிதம் என்று பெயர் வழங்கின ஓர்வகை முதல் தரமான காகிதம் செய்த விஷயமாயும் அவ்விடத்து மிஷனெரிமார் மிகுந்த பிரயோசனமுள்ளவர்களாய் இருந்தார்கள். வங்காள பாஷையில் திருப்பப்பட்ட புதிய ஏற்பாடு என்னும் பெயருள்ள ஒருவகை கவிட்டுநிறமுரட்டுக்காகிதத்தில் அச்சடிக்கப்பட்டது. அக்காகிதத்தில் சோற்றுப்பசை சேர்ந்திருந்தபடியினால் செல்லேறி சீக்கிரத்திற்குள்ளாக அதை அரித்துப்போட்டது. ஆகையினால் மிஷனெரிமார் கயிதாசி செய்யும் யந்திரம் ஒன்று ஸ்தாபித்து, ஒரு நீராவி என்ஜின் சீர்மையிலிருந்து வருவித்து வேலை நடப்பித்தார்கள். ஜனங்கள் சொல்லிக்கொண்டபடி அதுதான் முதல்முதல் இந்தியாவுக்கு வந்த 'தீ யந்திரம்' அதினால் வேலை நடக்கிறதைப் பார்க்கும்படி திரள்கூட்டமான ஜனங்கள் போனார்கள். அவ்வியந்திரம் தேவர்களுடைய சிற்பாசாரியாகிய விஸ்வகர்மனுடைய வேலைப்பாட்டுக்குத் தாழ்ந்ததல்ல என்று சொல்லிக்கொண்டார்கள். 1865-ம் வருஷம்வரை ஸிராம்பூர் காகிதத்திற்குப் பேர் பெற்றதாகவே இருந்தது.

வங்காளபாஷைக்கு மொழிதிருப்பின வேதாகமம்தான் கேரி ஐயர் செய்த முதல் புஸ்தகம். பாஷை மொழிபெயர்ப்பதிலும் மற்றவர்கள் மொழிபெயர்ப்புகளைச் சரிபார்ப்பதிலும் அவர் [illegible] வருஷம் அதே ஜோலியாய் இருந்தார். அவரும் அவர் கூடன் மிஷனெரிமாரும் வேதாகமத்தைக் கீழ் தேசங்களில் வழங்கும்* பாஷைகளிலெல்லாம் திருப்பும்படி மிகவும் முயற்சி செய்தார்கள். இம்முயற்சி சித்தியாய் நடந்தேறுவதற்கு அவர்களுக்கு அநேக வசதிகள் இருந்தது. கேரி ஐயர் இலேசாய்ப் பாஷைகளைக் கற்றுக்கொள்ளும் திறமையுள்ளவராய் இருந்தார். அதோடு சமஸ்கிருதம், வங்காளம் முதலிய பாஷைகளை நன்றாய்க் கற்றவராய் இருந்தபடியினால், இந்தியாவிலுள்ள மற்றும் ஆரிய பாஷைகளை எளிதாக கற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்தது. எப்படியென்றால், ஆரிய வகுப்பைச் சேர்ந்த பாஷைகள் ஒன்றுக்கொன்று இனமானவைகளானதால் மிச்சமான வார்த்தைகள் இவர் அறிந்தவைகளாகவே இருந்தன. 'நான் குஜராத்தி பாஷையில் முதலாவதாக வாசிக்கத் தொடங்கினபோதே எனக்குப் பொருள் மிகவும் தெளிவாய் விளங்கினபடியினால் நான் முனிஷியிடத்தில் யாதொரு கேள்வியும் கேட்கவேண்டியதாயிருக்கவில்லை' என்று சொல்லியிருக்கிறார்.

முனிஷியார் வைத்துக்கொண்டு கேரி ஐயர் தாமே வங்காளம், இந்தி, மராட்டி, சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் மொழிபெயர்ப்பு செய்தார். சில சமயங்களில் பற்பல இடங்களிலுள்ள முனிஷிமாரை சமஸ்கிருத பாஷையிலிருந்து தங்கள் சுதேச பாஷை

இருளிலிருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்' (மத். 4. 16) என்னும் வேத வாக்கியத்தை சிராம்பூர் அச்சுக்கூடத்தில் அச்சடித்தப்பிரகாரம் காட்டியது:

1. வங்காள பாஷை.
2. ஒரியா.
3. இந்துஸ்தானி அல்லது உருடு.
4. சமஸ்கிருதம்.
5. தெலுங்கு.
6. கன்னடம்.
7. ஆப்கானிய பாஷை.
8. பர்மீஸ்.
9. தமிழ்.
10. சிங்களம்.
11. மலேயா.
12. சீனம்.



களுக்கு வேதாகமத்தை மொழிதிருப்பும்படி செய்து அச்சடிக்கு முன் அவரும் மற்ற மிஷனெரிமாரும் அத்திருப்புதல்களை வாசித்துப் பார்த்துவந்தார்கள்.

மார்ஷ்மன் ஐயர் சீனபாஷை மொழிபெயர்ப்பு வேலையை எடுத்துக்கொண்டார். அவர் அப்பாஷைக்குத் திருப்பின சுவிசேஷங்கள், அத்தேசத்தில் வழக்கமாய் அச்சிடுகிறதுபோல மரத்துண்டு அச்சுக்கட்டைகளினால் அச்சிடப்படாமல் தனித்தனியான ஈய அச்சுறுப்புகளினால் அச்சடிக்கப்பட்டது.

வேதாகமம் முழுவதும் வங்காளம், அசாமிஸ், சமஸ்கிருதம், இந்தி, மராட்டி முதலிய பாஷைகளிலும், புதிய ஏற்பாடு 22 பாஷைகளிலும், சுவிசேஷங்கள் இன்னும் அநேக பாஷைகளிலும் அச்சிடப்பட்டன. இந்தத் திருப்புதல்கள் எல்லாம் சில விஷயங்களில் குறைவுள்ளவைகளாகத்தான் இருந்தன. என்றாலும், அவைகள் அக்காலத்திற்கு மிகவும் பிரயோஜனமானவைகளாய் இருந்தது மாத்திரமல்ல, பிற்காலத்தில் சரியான மொழிபெயர்ப்புகள் செய்வதற்கு மிக்க உதவியாகவும் இருந்தது.

கேரி ஐயர் வேதாகமம் மொழிதிருப்பினது மாத்திரமல்ல, அநேக பாஷைகளில் இலக்கண நூல்களும் ஒரு வங்காளபாஷை அகராதியும் எழுதினார். சமஸ்கிருதபாஷையிலிருந்து உற்பத்தியான பாஷைகளிலுள்ள வார்த்தைகளின் சரியான பிரயோகத்தைக் காட்டும் மேற்கோள்களுடன் ஒரு அகராதி செய்ய யோசித்துத் தொடங்கி 5 கிரந்தங்கள்தான் எழுதினார். இவ்வைந்து கிரந்தங்களும் சிராம்பூர் புஸ்தகசாலையில் இருக்கின்றன.

1812-ம் வருஷம் நெருப்பினால் அநேக அச்சுறுப்பு வர்க்கங்களும் மிகுதியான காகிதங்களும் ஏராளமான அச்சுப் புஸ்தகங்களும் அநேக வருஷங்கள் செலவிட்டு அரும் பிரயாசத்தோடு எழுதிவைத்திருந்த அநேக கையெழுத்துப் பிரதிகளும் எரிந்துபோயின. அந்நெருப்பு மூன்று நாள் எரிந்துகொண்டு நின்றது. அதினாலுண்டான நஷ்டம் லக்ஷம் ரூபாய் என்று கணிக்கப்பட்டது. இங்கிலாந்துக்கு இச்செய்தி போய் எட்டினபோது அநேகர் மிகவும் அனுதாபப்பட்டு 50 நாட்களுக்குள்ளாக லக்ஷம் ரூபாயையும் சேகரித்தனுப்பினார்கள்.

## கேரி ஐயர் ஓர் ஜனோபகாரி.

இந்தியாவுக்கு மிஷனெரிமார் வரக்கூடாதென்று கீழ் இந்திய கம்பனியார் தடுத்த அதே காலத்தில் அவர்கள் விக்கிரகாராதனைக்குக் கைகொடுத்துவந்தார்கள். 'இராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட ஓர் கூட்டத்தார், போன வாரம் காளிகாத் கோயிலுக்கு ஊர்க்கோலம் போய், சில நாட்களுக்கு முன் கம்பனியாருக்கு இத்தேசத்

தில் கிடைத்த ஜெயத்திற்காக அத்தேவதைக்கு அவர்கள் பெயரால் 5000 ரூபாய் காணிக்கை செலுத்தினார்கள். அங்கிலேயர் இப்படி விக்கிரகத்திற்குக் காணிக்கை செலுத்தினதை அநேக ஆயிரமான சுதேசிகள் பார்த்துக்கொண்டு நின்றார்கள் என்று உவார்ட் துரை எழுதிவைத்திருக்கிறார். மழைக்காக ஜெபஞ் செய்யும்படி பிராமணரை வைத்துக்கொண்டிருந்தார்கள். திருவிழா நாட்களில் விக்கிரகங்களுக்கு வாழ்த்துதலாக பீரங்கிகள் கொளுத்தினார்கள் இப்பேர்ப்பட்ட நடபடிக்கைகளில் சேருவதைப்பார்க்கிலும் வேலையை விட்டுவிடுவது நலமென்று எண்ணி, சென்னை பட்டாள தளகர்த்தராகிய ஸர் பெரிகிரின் மேயிட்லாந்து என்பவர் தம் வேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டார். இவ்வர்த்தமானங்கள் இங்கிலாந்தில் தெரியவந்தபொழுது, இனிமேல் அப்படிப்பட்ட காரியாதிகள் நடக்கக்கூடாது; இந்துக்கள் தங்கள் இஷ்டப்படி எந்தத் தெய்வத்தையும் வணங்கலாம்; ஆனால், கிறிஸ்தவர்கள் அவர்கள் வணக்கத்தில் சேரும்படி எள்ளளவேனும் இடம்பண்ணக்கூடாது என்று உத்தரவு செய்யப்பட்டது.

மார்க்க சுயாதீனம் முழுவதும் கொடுத்திருக்கிறது என்று சொல்லும்போது, சேவ அனுமதி இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு களவு செய்வதாவது, கொலை செய்வதாவது சற்றாவது இடமில்லை; பிறருக்கு யாதாமொரு தீங்கு செய்யாதமட்டுந்தான் அச்சுயாதீனம் என்று அறிந்துகொள்ளவேண்டும். தங்களுடைய காளிதேவதை ஜனங்களைக் கொன்று அவர்கள் உடைமைகளை எடுத்துக்கொள்ள உத்தரவு கொடுக்கிறது என்று சொல்லி தக்ஸ் ஜாதியார் கொள்ளையடித்துக்கொண்டுவந்தார்கள். பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அவர்கள் சொன்னதை ஒப்புக்கொள்ளாமல் அவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்து மிகவும் நியாயமாய் தண்டனை செய்தார்கள். கேரி ஐயர் ஒருவாறு இதைப்போலொத்த வேறிரண்டு இந்து வழக்கங்களை நிராகரிப்பதற்கு முயற்சி செய்தார்.

அதின் ஓட்டம் நெடுகிலும் கங்கையானது ஓர் புண்ணிய நதி எனச் சொல்லப்பட்டாலும் அது சங்கமமாகிற இடத்திலிருக்கிற சண்டர்பன்ஸ் தீவுகளிலுள்ள சாகர் தீவு மற்றெல்லா இடங்களைப் பார்க்கிலும் மிகவும் விசேஷித்த இடம் என்று எண்ணப்பட்டுவருகிறது. அவ்விடத்தில் ஸ்நானஞ் செய்தால் முன் செய்த பாவமானாலுஞ் சரி, இப்போ செய்கிற பாவமானாலுஞ் சரி, இனிமேல் செய்யும் பாவமானாலுஞ் சரி, சகல பாவங்களும் அற நீங்கிப்போம் என்று எண்ணி, அவ்விடத்தில் வருஷத்துக்கொருதரம் கொண்டாடப்படும் திருவிழாவுக்கு அநேகர் நூற்றுக்கணக்கான மைல் பிரயாணஞ்செய்து போகிறார்கள்.

சாகர் தீவு எப்படி ஓர் புண்ணிய ஸ்தலமாக எண்ணப்பட வந்தது என்பதைப்பற்றி ராமாயணத்தில் பின்வரும் கதை சொல்லியிருக்கின்றது:

சாகர் என்னும் அரசனுக்கு நெடுங் காலமாக குழந்தைகள் இல்லாதிருந்தது. அவன் தவநிலையைப் பார்த்து, சிவன் சந்தோஷப்பட்டு அவனுக்கு 60,000 குமாரர் கொடுத்தான். அப்பால், சாகர் அரசன் இந்திரனுடைய ஸ்தானம் கிடைக்கவேண்டுமென்று விரும்பி, அஸ்வமேதயாகம் (100 குதிரைப் பலி) செய்ய, அதில் கடைசிக் குதிரையை இந்திரன் திருடிக்கொண்டு போய்விட்டான். அவ்வரசனுடைய குமாரர் அக்குதிரைக்காக நாலா பக்கமும் தேடித் திரிகையில் தவஞ் செய்துகொண்டு நின்ற கபிலமுனியை அவன் தவநிலையினின்று குலைத்துவிட்டார்கள். அதின்பேரில் அவன் அவர்களைச் சபிக்கவே, அவர்கள் சாம்பலாகிப்போனார்கள். அநேக வருஷங்களுக்குப் பிற்பாடு, சாகர் அரசனுடைய பிரபௌத்திரனாகிய பகிரதன் என்பவன் அருந் தவஞ் செய்து கங்கைநதி வரும்படியாக ஓர் வரத்தை தேவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொண்டான். அவ்வண்ணம் அந்நதி ஜலம் வந்து அச்சாம்பல்களைத் தொடவே, அந்த இளவரசர் யாவரும் உயிரடைந்து உடனே பொன் ரதங்களில் இந்திரனுடைய சுவர்க்கலோகத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். கங்கை தேவதை, சாகர் அரசனுடைய குமாரரை இந்த இடத்தில் உயிர்ப்பித்து சுவர்க்கம் சேர்த்ததால், மற்றெந்த இடத்தைப்பார்க்கிலும் விசேஷமாய் இந்த இடம் பாவம் நீங்கத்தக்க ஸ்தலமாய் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

ஸ்நானஞ் செய்வதுமல்லாமல் சில வேளைகளில் ஸ்திரீகள் தங்களுடைய குழந்தைகளை அத்தேவதைக்குக் காணிக்கையாய்ச் செலுத்திப்போடுவதாகவும் பொருத்தனை பண்ணி முதலைகள் கிடக்கும் இடத்தில் குழந்தைகளை எறிவார்கள். முதலைகள் உடனே அக்குழந்தைகளை விழுங்கிவிடுமானால் அத்தேவதை அவர்கள் காணிக்கையை ஏற்றுக்கொண்டது என நினைத்துக்கொள்ளுவார்கள்.

நரபலிகள் செலுத்தும்படி சாஸ்திரங்களில் கற்பித்திருக்கிறதென்று இந்துக்கள் எவ்விடங்களில் சொன்னார்களோ அவ்விடங்களிலெல்லாம் நரபலி செலுத்தும்படியாக இராஜாங்கத்தார் இதுவரையும் இடங்கொடுத்துவந்திருந்தார்கள். ஆனால் இப்பாவமான வழக்கம் நடந்தேறாமல் நிறுத்தும்படி முயற்சிகளெடுத்த முதல் கவர்னர் ஜெனரல் உவெல்லெஸ்லி பிரபு. நரபலி செலுத்தும்படி கற்பித்திருக்கும் புஸ்தகங்களை ஆராயும்படி அவர் கேரி ஐயரைக் கேட்டார். கேரி ஐயர் காலதாமதமில்லாமல் உடனே இவ்வழக்கத்தைநிறுத்திப்போடவேண்டுமென்று சொன்னார். அதன்பேரில் குழந்தைகளை

ஆற்றில் எறிகிறவர்கள் கடுந்தண்டனை அடைவார்கள் என்று 1802-ம் ஹு ஆகஸ்ற்று மீ விளம்பரம் சாற்றப்பட்டது. இவ்வுத்தரவைக் கைக்கொள்ளும்படி பார்த்துக்கொள்வதற்காக அடுத்த திருவிழாவில் சாகர் தீவில் சிப்பாய்கள் காவல் வைத்துவைத்திருந்தது. அவ்வழக்கம் இப்போது முழுவதும் மறந்துபோய்விட்டபடியினால், சிலர் அவ் வழக்கம் ஒருநாளாலும் இருந்திருப்பதேயில்லை எனச் சாதிக்கிறார்கள்.

கேரி ஐயர் கவர்ண்மென்றாருக்கு அனுப்பின ரிப்போர்ட்டில் ஸ்திரீகளைத் தங்கள் புருஷர் பிரேதத்தோடு வைத்துத் தகனிக்கிறதாவது அடக்கம் செய்கிறதாவது சரியல்ல எனப் பேசி எழுதினார். ஸ்திரீகள் உடன்கட்டை ஏறுகிறதைத் தாம் முதல்முதல் பார்க்கும்படியாக நேரிட்ட தருணம் பின்வருமாறு எனக் கூறுகின்றார்:

'ஒருநாள் சாயரட்சை ஆற்றின் கரைவழியாய்க் கல்கத்தாவிலிருந்து வரும்பொழுது ஒரு திரள் கூட்டத்தைக் கண்டேன். அக் கூட்டம் யாது என விசாரிக்க, ஒரு ஸ்திரீயைத் தகனிக்கும்படியாக கூடியிருக்கும் கூட்டம் என்று அறிந்தேன். அந்த ஸ்திரீ தன் புருஷனுடைய பிரேதம் கிடத்தியிருந்த ஓர் விறகு கட்டின் அருகே நின்றாள். நான் உடன்கட்டை ஏறுகிறது பாவமான காரியம் என்று அவர்களுக்கு உணர்த்த மிகவும் பிரயாசப்பட்டேன்; ஆனால், அவர்கள் நான் சொன்னதைச் சற்றாவது மனதில் கொள்ளவில்லை. என்னைப் போய்விடும்படியாக சொன்னார்கள். அந்த ஸ்திரீ பலகாரங்கள் தூவிக்கொண்டு அந்த விறகுக்கட்டை அநேகந்தரம் சுற்றிச் சுற்றி வந்தாள். கூடி நின்றவர்கள் அப்பலகாரங்களை ஆவலுடன் பொறுக்கி யெடுத்து, மிகவும் புண்ணிய பதார்த்தமாக பாவித்து சாப்பிட்டார்கள். அப்பால் அவள் பிரேதத்திற்குப் பக்கத்தில் படுத்தாள். அவள்மேலும் பிரேதத்தின்மேலும் அதிக உயரத்திற்குச் சருகு குவித்து அதன்மேல் நெய் வார்த்தார்கள். பின்பு இரண்டு மூங்கில் கழிகளை அம்பாரத்தின்மேல் வைத்து நன்றாய்ப் பிடித்துக்கொண்டு நெருப்பு வைத்தார்கள். நெருப்பு சுவாலைவிட்டு எரியத் தொடங்கினது. உடனே ஜனங்கள், 'ஹரிபால்! ஹரிபால்!' என்று மிகவும் சத்தமாய்க் கூக்குரல் இட்டார்கள். ஆதலால், அவள் சத்தம் போட்டிருந்தாலும் சத்தம் வெளியே கேட்டிருக்காது. மூங்கில் கழிகளினால் இறுக்கமாய் அமுக்கிக்கொண்டிருந்தபடியினால் அவள் வெளியேறிவிடவேண்டும் என்றாலும் வெளியேறமுடியாது.'

பூர்வீகத்தில் ஆரியருக்குள் ஸ்திரீகளை உயிரோடு தகனிக்கும் வழக்கம் இருந்ததேயில்லை. அவர்களுடைய வேதங்களில் இவ்வழக்கத்தைக் கற்பிக்கிற யாதாமொரு குறிப்பும் இல்லை. என்றாலும் சிலர் பிராமணர்கள் தாங்கள் செய்கிறது சரி என்று காட்டும்படியாக ஒரு வாக்கியத்தைத் தப்பிதமாய் தாற்பரியப்படுத்திக்கொண்டார்கள்.

இப்படி கிஷ்ரேமானவிதமாய் மரணத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுப்பதற்கு ஸ்திரீகள் சம்மதிக்கும்படி உலகத்திலிருக்கிறதைப் பார்க்கிலும் உயிர் மாய்த்துவிடுகிறது உத்தமம் என்று நினைக்கத் தக்கபிரகாரம் விதவைகளை எவ்விஷயத்திலும் அநேக ஜாதி இந் துக்கள் மிகவும் கொரேமாய் நடத்தி, ஸ்திரீகள் தங்கள் புருஷ ருடைய பிரேதத்தோடு தங்களைத் தகனித்துவிட்டால், மறுலோ கத்தில் மிகவும் நற்குணசீலிகளாயிருப்பார்கள் என்றும், அனந்த யுகங்களாக பாக்கியம் அனுபவிப்பார்கள் என்றும் அவர்களுக்குச் சொன்னார்கள். உதாரணமாக :

'தன் புருஷனுடைய பிரேதத்தோடு தகனிக்கப்படும்படியாக தன்னை ஒப்புக்கொடுக்கும் மனைவி அருந்ததியைப்போலாகி சுவர்க் கத்தில் வாசம்பண்ணுவாள்.'

'மனுஷர் தேகத்தில் 3½ கோடி ரோமம் இருக்கிறதுபோல அவ்வளவு தொகையான நெடுங்காலம் தன் புருஷனோடு சேர்ந்து சுவர்க்கத்தில் வாழுவாள்.'

'தன் புருஷனோடு செல்லுகிறவள், தன் தகப்பன் குடும்பத் துப் பாவத்தையும், தன் தாயின் குடும்பத்துப் பாவத்தையும், தான் வாழ்க்கைப்பட்ட கணவன் குடும்பத்துப் பாவத்தையும் நீக்கிவிடு கிறாள்' என்று சொல்லியிருக்கிறது.

இக்கட்டளையைக் கைக்கொள்ளாதவர்களுக்கு வரும் மோசங் கள் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றன :

'தன் புருஷன் மரிததபின் தன்னைத் தகனிக்க ஒப்புக்கொடா மல் இருக்கும் ஸ்திரீ, தகனிக்கப்படும் வரைக்கும் ஒரு பெண்ணாக புனர் ஜனனம் எடுப்பாள்.'

இப்படிப்பட்ட பொய்யான வார்த்தைகளை நம்பிக்கொண்டும் நிர்ப்பந்தமான விதவை நிலைமையிலிருந்து மீண்டுகொள்ளும்படி யாகவும் அக்கினிக்கு இரையாக சம்மதித்த விதவைகள் சொஞ் சப்பேரல்ல 1817-ம் ஆு வங்காள மாகாணத்தில் ஒவ்வொரு நாளும் சராசரி இரண்டு விதவைகள் உயிரோடே தகனிக்கப்பட்ட தாக கணக்கிடப்பட்டது.

உடன்கட்டை ஏறுகிற வழக்கத்தை நிறுத்தும்படியாக முதல் முதல் முயற்சி எடுத்தவர்கள், சிராம்பூரில் வசித்துவந்த மிஷனெரி மார்தான் 1804-ம் வருஷத்தில் இவ்விஷயத்தைப்பற்றித் தீர விசாரிக்கும்படியாக அவர்கள் 10 ஆட்களை கல்கத்தாவிலிருந்து 30 மைலுக்குட்பட்ட ஊர்களுக்கு அனுப்பினார்கள். அப்பால் அம் மிஷனெரிமார் அவ்வழக்கத்தைப்பற்றிய தங்கள் அபிப்பிராயத்தை வெல்லெஸ்லி பிரபுவினிடத்தில் சொன்னார்கள். ஒரு வாரத்திற் குள்ளாக அவர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போகவேண்டியதா

யிருந்தபடியினால் அவர் அவ்விஷயமாய் யாதொரு முயற்சியும் எடுக்க ஏதுவில்லாதிருந்தது. 1818-ம் வருஷம் ராம்மோஹன்ராய் என்பவர் 'ஸ்திரீகளை உயிரோடே தகனிக்கும் வழக்கத்தை' ஆட்சேபித்து ஒரு சிறு பிரபந்தம் பிரசுரஞ்செய்தார். சிலர் அவருக்கு விரோதமாய் தங்கள் கோட்பாட்டை ஸ்தாபிக்கும்படி 'சந்திரிகம்' என்னும் ஒரு வர்த்தமானி பிரசுரஞ்செய்தார்கள்.

1829-ம் வருஷம் உல்லியம் பென்றிங்க் பிரபு என்னும் கவர்ணர் ஜெனரல் நன்றாய் ஆராய்ச்சி செய்ததின்பேரில், உடன்கட்டை ஏறுகிற வழக்கம் தப்பிதமானது என்று அறிந்து, அவ்வழக்கத்தை இனிமேல் அநுசரிக்கிறவர்கள் குற்றவிசாரணை நியாயஸ்தலங்களில் தண்டிக்கப்படுவார்கள் என்று ஒரு தாக்கீது பிறப்பித்தார். அநேகர் அவ்வழக்கம் தங்களுக்கு ஓர் புண்ணிய நியமம் மாத்திரமல்ல, பெரிய சலாக்கியம் என்றும், இந்த தாக்கீதானது இந்துக்களுடைய மார்க்காசார விஷயங்களில் ஒரு உத்தியோகஸ்தராவது சற்றேனும் தலையிட்டுக்கொள்ளக்கூடாது என்று செய்த இராஜ விளம்பரத்திற்கு முற்றிலும் விரோதமானதா யிருக்கின்றது என்றும் சொல்லி இந்திய கவர்ன்மென்றாருக்கு ஒரு மனு எழுதி அனுப்பினார்கள். உல்லியம் பென்றிங்க் பிரபு: அந்தச் சட்டத்தை மாற்றமாட்டேன்; ஆனால் மனுவை இராஜ ஆலோசனை சபைக்கு அனுப்புவிக்கிறேன் என்று சொல்லி அங்கே அனுப்பினார். இம்மனு இராஜ ஆலோசனை சபையில் வாசிக்கப்பட்ட காலத்தில் இராஜ ஆலோசனை சபையார் அம்மனுவைத் தள்ளிப்போட்டார்கள்.

1812-ம் வருஷத்தில் ஒரு குஷ்டரோகி உயிரோடே தகனிக்கப்பட்டதை கேரி ஐயர் பார்த்தார். 10 முழ ஆழமுள்ள ஒரு குழி வெட்டி அதினடியில் நெருப்புப் போட்டிருந்தது; இவ்வியாதியஸ்தன் அக்குழிக்குள் தானாகவே உருண்டு விழுந்தான். ஆனால் நெருப்பு உறைத்தவுடனே வெளியே தூக்கி எடுத்துவிட வேண்டுமெனக் கெஞ்சி, வெளியேற மிகவும் பிரயாசப்பட்டான். அவனுடைய தாயும் சகோதரியும் அவன் வெளியேறிவிடாதபடி உள்ளே பிடித்துத் தள்ளிக்கொண்டு நின்றார்கள். இவ்விதமாக அவன் அதிக வேதனையோடு தீயில் மாண்டான். அடுத்த பிறப்பில் சுத்தமாகி நல்ல சுகதேகியாய் பிறப்பான் என்ற அபிப்பிராயத்தினால்தான் இப்படிச் செய்தார்கள். கேரி ஐயர் மிகவும் பிரயாசம் எடுத்து, கல்கத்தாவில் குஷ்டரோகிகளுக்கு ஒரு ஆஸ்பத்திரி கட்டிவைக்கும்படியாக ஏற்பாடு செய்தார்.

## கிருஷிகத்தொழில் விஷயமாய் கேரி ஐயர் இந்தியாவில் செய்த முயற்சிகள்.

சிறு பையனாக இருக்கும்போதே, புஷ்பங்களிலும் தோட்டம் பயிர் செய்வதிலும் கேரி ஐயருக்கு அதிக பிரீதியுண்டு. இங்கிலாந்திலுள்ள பூஞ்செடிகள், பழமரங்கள் முதலியவற்றை இந்தியாவில் பயிர்செய்து விருத்திபண்ணும் நோக்கமாய் வருஷந்தோறும் இங்கிலாந்துக்கு எழுதி பலவகை விதைகள் முதனைபட்டியிலிருக்கும்போது வருத்தினார். சிராம்பூருக்கு வந்தபிற்பாடு 5 எக்ரு நிலத்தை ஆடு மாடு உட்செல்லாதபடி வேலியடைத்து ஒரு தோட்டமாக சேர்த்துப் பயிரிட்டுவந்தார். நாளடைவில் அது பற்பலவகையான பூஞ்செடிகளும், தாபரவர்க்கங்களுமுள்ள ஓர் நேர்த்தியான நந்தவனம் ஆனது. தம்முடைய தோட்டத்திலுள்ள பூஞ்செடிகளை மற்றும இடங்களுக்கு அனுப்பி அங்கிருந்து பூஞ்செடிகளும் வருத்தி வந்தார். அவர் பூஞ்செடிகளில் மிகவும் பிரியமுள்ளவராயிருந்தபடியினால் அவைகளிலிருந்து ஒருக்காலும் பூ பிடுங்கமாட்டார். ஒவ்வொருநாள் காலையிலும் தம்முடைய தோட்டத்திற்குப் போவார். அவர் பெலவீனப்பட்டு நடமாடித்திரிய வலாத காலத்தில் வேலைக்காரர் நாலு ரோதைகள் மாட்டியிருக்கும் ஒரு பலகையின் மேல் ஒரு நாற்காலியை வைத்து அதின்மேல் அவரைத் தோட்டத்திற்குக் கொண்டுபோவார்கள். கடைசியாக அவர் அறையை விட்டு வெளியேற முடியாமற்போன காலத்தில் தோட்டக்காரரைத் தம்மண்டைக்கு வரவழைத்து அவர்களோடு செடிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார். அவருடைய வேலைக்காரருக்கு அவரே தோட்டவேலை கற்றுக்கொடுத்தார்.

பூஞ்செடிகள் மாத்திரமல்ல, பெரிய உத்திர மரங்களும், பழமரங்களும் வைத்து உண்டாக்கினார். மரக்கறி பதார்த்தங்களும் பயிரிட்டுவந்தார். கீரை வகைகளும் வைத்து வளர்த்தார்.

இந்தியாவின் குடிகளுடைய ஸ்திதி நிலைமையைப்பற்றி கேரி ஐயர் சொல்லுகிறதாவது:

யாதொரு கடனில்லாமலும் விளையும் தானியத்தில் மற்றவர்களுக்குப் பங்கு கொடுக்கவேண்டியதாயிராமலும், கிடைத்த தானியம் முழுவதையும் தானே வைத்து அனுபவிக்கும் சமுசாரியை இத்தேசத்தில் காண்பது மிகவும் அபூர்வம் என்று சொல்லலாம். இத்தேசத்தவர்களுக்குள் இருக்கும் கெட்ட ஏற்பாடுகளினால் அநேகர் விதை வாங்க முதலாய்ப் பணமில்லாமல் தாங்கள் விதைக்கும் விதைக்காகவும் விளையும் காலம வரை தங்கள் சாப்பாட்டுக்காகவும் கடன் வாங்கி அக்கடனைத் தீர்க்க அறுப்புக்குக் காத்திருக்

கிறார்கள். இதற்குள்ளாக அவர்கள் வாங்கின 100 ரூபாய் கடன் 140 ரூபாய் ஆகிவிடுகிறது. சிலவேளைகளில் கடன் வசூல் செய்யும் முறையினால் 100 ரூபாய்க்கு 150 ரூபாய் கொடுக்கவேண்டியதாக நேரிடுகிறது. ஆகவே, நல்விளைச்சலுள்ள காலத்திலுங் கூட அடுத்த வருஷத்திற்கென்று வைத்துவைக்கத்தக்கதாக கொஞ்சமும் மிஞ்சுகிறதில்லை. அடுத்த விதைப்புக் காலத்திலும் முன் போலவே திரும்ப கடன் வாங்க நேரிடுகிறது. பயிர் தீய்ந்து போனாலோ இவன், கடன் கொடுத்தவனுக்கு அடிமைபோலாகி விடுகிறான். கடன் கொடுத்தவன் இரக்க நெஞ்சுள்ளவன் என்ற போதிலும் அவன் பாடு மிகவும் கேவலந்தான்.

முற்காலங்களில் பஞ்சம், யுத்தம், கொள்ளைநோய் முதலிய வற்றினால் ஜனத்தொகை அதிகரிக்க இடமில்லாதிருந்தது. இப்போதோ வருஷத்துக்கு 30 லக்ஷம் ஜனங்கள் அதிகப்பட்டுவருகிறார்கள். ஆகவே, இவர்கள் போஷிப்புக்கும் தானியம் அவசியம். கிருஷிகத்தொழிலை விருத்தி செய்யாவிட்டால் சீக்கிரத்துக்குள்ளாக அத்தனை பெயரையும் தேசத்தில் வைத்து காப்பாற்ற முடியாமற்போம். நல்ல சாதனங்களைக் கையாடி பயிரிட்டுவந்தால் இரண்டு மூன்று மடங்கு விளைச்சல் கிடைக்குமென்று அறிந்திருக்கிறார்கள். இத்தேசத்தில் உரமானது பூமியை நல்விளைச்சலுக் கேற்றதாக கொண்டுவருவதற்கு உபயோகிக்கப்படாமல் விறகுக்காக உபயோகிக்கப்பட்டுவருகிறது. ஆடு, மாடு, குதிரைகளைப் போல முள்ள பெரும் ஜாதியாக விருத்திபண்ணும் நோக்கமாகவும் யாதாதொரு பிரயத்தனம் இன்னம் செய்யப்படவில்லை. பிரயோஜனமான நூதனவகை செடிகள் மற்ற இடங்களிலிருந்து கொண்டுவந்து இங்கே பயிர் செய்யவேண்டும் கேரி ஐயர் முயற்சிக்குப் பின், காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு, காய்ச்சலுக்கு நல்ல ஔஷதமாக உபயோகிக்கப்பட்டுவருகிற குயினின் எடுக்கிற சின்கோனா செடி முதலியவை இப்போது பயிரிடப்பட்டுவருகின்றன.

ஜனங்களுடைய ஸ்திதியை உயர்த்தும்படி கருதி, கடன் வாங்குகிற வழக்கத்தை நிறுத்தும்படியாக கேரி ஐயர் பிரயாசப்பட்டார். இது விஷயத்தைப்பற்றி அவர் எழுதின ஓர் பிரபந்தத்தின் பொழிப்பாவது:

ஒரு தேசத்தாரின் ஐசுவரியத்திற்காவது தரித்திரத்திற்காவது முக்கிய காரணம், அத்தேச துரைத்தனமுறையுமல்ல, அதின் நிலநீர் வளமுமல்ல; விசேஷமாய் அவர்களுடைய வழக்க ஆசாரங்களும் கோட்பாடுகளுமே என்று சொல்லலாம். இத்தேசத்தவர்களுடைய தரித்திரத்திற்குக்காரணமாயிருக்கிற அநேக விஷயங்களில் ஒன்று என்னவென்றால், சகலருக்குள்ளுமிருக்கிற கடன்வாங்கு

கிற சுபாவமே. இச்சுபாவம் ஓர் ஓர் மாகாணங்களில் பட்டணங்களில் மாத்திரமல்ல, அல்லது ஓர் ஓர் ஜாதியாருக்குள் மாத்திரமல்ல, தேசம் நெடுக எல்லாருக்குள்ளும் விடாப் பற்றுகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஒரு மனுஷன் ஓர் கடனைச் செலுத்தி தீர்த்தவுடனே இன்னொரு பக்கத்தில் கடன் வாங்கப்போகிருன். அல்லது பெரும்பாலும் நடக்கிறபடி ஒரு கடனைச் செலுத்தித் தீர்க்குமுன்னமே வேறு கடனும் புதிதாக வாங்கிக்கொள்ளுகிருன். இப்படிக் கடன் வாங்குகிற சுபாவமும் கடன்கள் பேரில் போடப்படுகிற கடும் வட்டியுமே இத்தேசத்தார்களுடைய இவ்வளவு நிர்ப்பாக்கியத்திற்கும் சங்கடத்திற்கும் காரணம் என்று ஐயமறச் சொல்லலாம்' என்பதே.

கடன் வாங்குகிறதற்கு இருக்கும் ஒரு முக்கிய காரணம், கலியாணங்களில் செய்கிற பெருஞ் செலவு என்று சொல்லப்படுகிறது. சில நாட்களுக்கு நின்று பின் மாறிப்போகிற வீண் ஆடம்பரத்தின் பொருட்டு, அநேக வருஷங்களாக கஷ்டத்துடன் இறுக்க வேண்டிய கடன் வருவித்துக்கொள்ளுகிருர்கள்.

இதினுல் விளையும் கேட்டை நீக்கும்படி கேரி ஐயர் ஸேவிங்ஸ் பாங்கிகள் ஸ்தாபிக்கும்படி முயன்றுர்.

கேரி ஐயர் மரணத்துக்குப் பிற்பாடு அவர் ஸ்தாபித்த இந்திய கிருஷிக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கல்லால் சித்திரித்த ஒரு சிலை அவருக்கு ஞாபகசின்னமாக வைக்கும்படி தீர்மானம்பண்ணினுர்கள். அவர்கள் பண்ணின தீர்மானமாவது :

'இந்தியாவின் ஜனங்களுடைய வாழ்வைக் கருதி, கிருஷிகத்தொழிலை விசேஷமாய் விருத்திசெய்து, தம்முடைய முழுப் பிரயாசத்தையும், நேரத்தையும், செல்வாக்கையும் இடைவிடாது உபயோகித்து வந்தவரும், இந்திய கிருஷிக சங்கத்தை ஸ்தாபித்து ஜீவித்துப்போனவருமான சங்கிக்கப்படத்தக்க டாக்ற்றர் உல்லியம் கேரி ஐயர் என்பவர், பிரிட்டிஷ் இந்தியாவின் மனே செல்வ விருத்தி விஷயமாய்ச் செய்திருக்கும் பேருதவியையும் நன்மையையும் இந்திய கிருஷிக சங்கத்து மெம்பர்கள் நன்குமதித்து, மிகவும் கீர்த்திபிரஸ்தாபமான இம்மஹானுபாவன் தன்னயம்பாராட்டாமல் சுத்த இருதயத்தோடும் விடாமுயற்சியோடும் செய்து வந்த வேலையை என்றும் ஞாபகப்படுத்தும அடையாளமாகவும், அவருடைய சிறந்த குணசீலங்களை சரியானபடி உணர்ந்ததற்கு அத்தாட்சியாகவும், மெட்கால்வ் மாளிகையைச் சேர்ந்த தங்களுடைய புது மண்டபத்தில் அவருடைய சிலை ஒன்று கல்லில் வெட்டிவைக்க விரும்புகிருர்கள்' என்பதே.

கேரி ஐயருடைய தோட்டம் பொழுதுபோக்குகிறதற்காக

அவர் போகும் இடமாகமாத்திரம் இருக்கவில்லை. 'நான் சூரியன் உதயமாகுமுன்னமே எழும்பி என்னுடைய வழக்கப்பிரகாரம் தியானஞ் செய்துகொண்டும் ஜெபம்பண்ணிக்கொண்டும் வேலைக்காரர் குடும்ப ஜெபத்திற்காக வரும்வரைக்கும் தோட்டத்தில் உலாத்திக்கொண்டு நிற்பேன்' என்று தம்முடைய தினவர்த்தமான புஸ்தகம் ஒன்றில் எழுதிவைத்திருக்கிறார்.

## கல்வி விஷயமாய் கேரி ஐயர் எடுத்துக்கொண்ட முயற்சிகள்.

இந்தியாவில் மிஷனெரிமார் பெரும்பாலும் செய்த முதற் காரியம் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்ததே. முதனபட்டி நீலத்தொழிற்சாலையை மேல்பார்த்துக்கொண்டிருக்கும்போது கேரி ஐயர் தம்முடைய சொந்த செலவில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்து வேலை நடத்திவந்தார். ஆனால் பள்ளிக்கூட வேலை விஸ்தாரமாய் நடந்தது, சிராம்பூருக்குப் போனபின்தான். கேரி ஐயரைப் போலவே மார்ஷ்மன் ஐயரும் இவ்வேலையில் மிகவும் ஊக்கமுள்ளவராய் இருந்தார். முதல் வருஷத்திலேயே வங்காளபாஷை கற்றுக்கொடுத்த பள்ளிக்கூடத்திற்கு 40 பிள்ளைகள் வரை வந்தார்கள். சிலவேளைகளில் நிர்நிமித்தமாக முந்தின வருஷங்களிலுள்ள பிள்ளைகள், கப்பல் வழியாய் மிஷனெரிமார் தங்களை இங்கிலாந்துக்குக் கொண்டுபோய்விடுவார்கள் எனப் பயந்து பள்ளிக்கூடத்திற்கு வராமல் நின்றுகொள்ளுவதும் உண்டு.

1803-ம் வருஷ ஜூலை மாசத்தில், முதலாவதாக ஓய்வுநாள் பள்ளிக்கூடம் வைத்தது கேரி ஐயருடைய குமாரர். மார்ஷ்மன் ஐயரும் அவர் துணைவியும் இரண்டு போர்டிங் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தார்கள் என்று முன் பார்த்தோம். அப்பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகள் வங்காளபாஷை இலவசமாய் கற்றுக்கொடுக்கும் இரண்டு பள்ளிக்கூடங்களை ஆதரித்துவந்ததுமன்றி அப்பள்ளிக்கூடங்களில் படித்துக்கொடுத்தும் வந்தார்கள். போதுமான பணம் கைவசமானபோது அந்த மிஷனெரிமார் பற்பல இடங்களில் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார்கள். அவர்கள் ஸ்தாபித்த பள்ளிக்கூடங்களின் மொத்த தொகை 126. அவைகளில் அநேகமாயிரமான பிள்ளைகள் கல்வி கற்றுவந்தார்கள். 1817-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்திய கல்வி அபிவிருத்தி சங்கத்தார் இருநூற்றுக்கு மேலான பள்ளிக்கூடங்களை நடத்தினார்கள். இப்போது கிறிஸ்தவகல்வி அபிவிருத்திசங்கம் என்று அழைக்கப்படுகிறது

1818-ம் வருஷ கிறிஸ்தவர்களானாலுஞ் சரி, இதர மதஸ்தரானாலுஞ் சரி, யாவருக்கும் ஐரோப்பியருடைய சாஸ்திர விதிகளைக்

கற்றுக்கொடுக்கும் நோக்கமாய் ஒரு வித்தியாசாலை ஸ்தாபிக்க சிராம்பூரில் வசித்துவந்த அம்மூன்று மிஷனெரிமாரும் தீர்மானம்பண்ணினார்கள். அதில் ஐரோப்பியருடைய சாஸ்திரங்களிலடங்கிய சிரேஷ்டமான கோட்பாடுகளைக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்றும்; தத்துவசாஸ்திரம், கலைக்கியானம், சரித்திரம் முதலியவை கற்றுக்கொள்வதற்கேதுவாக இத்தேசப் பாஷைகளில் சிறு புஸ்தகங்கள் எழுதி பிரசுரஞ்செய்யவேண்டுமென்றும்; உபாத்திமாரைப் பயிற்றுவிப்பதற்கென ஒரு நார்மல் பாடசாலையும், கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கு வேதாகமம் படிப்பிப்பதற்கென ஒரு வேதபாட வகுப்பும் அதனோடு சேர்ந்து இருக்கவேண்டுமென்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

அந்த வித்தியாசாலை மிகவும் செவ்வையாய் அமைக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் அங்கிலேய இராஜாங்கத்தார் முதலாவதாக ஸ்தாபித்த கலாசாலைகளில் முழுவதுமாக கீழ்தேசப் பாஷைகள்தான் கற்றுக்கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் ஜனங்களுடைய சுதேச பாஷைகளை கிஞ்சித்தும் விருத்திசெய்யக் கருதாமல் இங்கிலீஷ் பாஷை ஒன்றையே அவர்கள் கற்றுக்கொடுத்துவந்தார்கள். சிராம்பூர் மிஷனெரிமாரோ தாங்கள் ஸ்தாபித்த வித்தியாசாலையில் இரண்டில் ஒன்றையாவது எளனம்பண்ணாமல் இரண்டையும் ஒன்றுபோலவே கவனித்துவந்தார்கள். இந்துதேசம் முழுவதிலும் இங்கிலீஷ் பாஷை பரவவும், ஜனங்கள் அப்பாஷையைக் களிவுடன் கற்றுக்கொள்ளவும் கருவியாயிருந்தது, டாக்ற்றர் டவ் என்னும் புண்ணிய புருஷன். ஆனால், கேரி ஐயரும் அவரோடு சேர்ந்த மிஷனெரிமாரும் டாக்ற்றர் டவ் ஐயர் இத்தேசத்திற்கு வருகிறதற்கு அநேக வருஷங்களுக்கு முன்னமே இங்கிலீஷ் பாஷையை இத்தேசத்தவர் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் என்பதை அறிந்துணர்ந்திருந்தார்கள்.

ஹேஸ்டிங்ஸ் பிரபு என்னும் கவர்ணர் ஜெனரல் அந்த வித்தியாசாலை விஷயமாய் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டு அதற்கு முதல் பரிபாலன முதலாளியானார். தென்மார்க்கு தேசத்தானான சிராமபூர் கவர்ணர் அதற்கு முதல் அக்கிராசனாபதியாக இருக்கச் சம்மதித்தார். ஆகவே, ஒரு துண்டு நிலம் வாங்கி அதில் ஒரு பெரிய விசித்திரமான கட்டடம் கட்ட பிளான் தயார்செய்யப்பட்டது. அவ்வித்தியாசாலை விஷயமாய்ச் சிராம்பூர் மிஷனெரிமார் முதலாவது 2,500 ரூபாய் கொடுத்தார்கள். பிற்பாடு அத்தொகையை 1,50,000 ரூபாய் ஆக்கினார்கள். அக்கட்டட மொத்தச் செலவு லக்ஷ ரூபாய் அதில் நாலில் மூன்று பாகம் கேரி ஐயரும் அவரைச் சேர்ந்த மற்ற மிஷனெரிமாரும் கொடுத்தார்கள்.

னார். மரணப்படுக்கையிலிருந்தபோது தானியேல் உயில்சன் என்னும் பெயருள்ள கல்கத்தா நகரி சண்காணியார் அவருடைய ஆசீர்வாதம் தேடினார் பின்வரும் சம்பாஷணை கேரி ஐயருக்கும் அவருடைய குமாரரில் ஒருவனுக்கும் நடந்தது :—

மகன். 'ஐயா! உம்முடைய ஆத்தும காரியம் எப்படி இருக்கின்றது?'

தகப்பன். 'எக்களிப்பான எண்ணங்கள் என் மனதில் இல்லாவிட்டாலும், தேவனுடைய வாக்குத்தத்தங்களின்பேரில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறதற்காக அவரைத் துதிக்கிறேன். தேவன் என்னுடைய கைகளைப் பிடித்து, என்னுடைய சித்தத்தின்படியல்ல, முழுவதும் தம்முடைய சித்தத்தின்படியே என்னை நடத்த விருப்பமாய இருக்கிறேன்.

மகன். 'உமக்கு யாதாமொரு பயமும் சந்தேகமும் இல்லையா?'

தகப்பன். 'யாதொன்றும் இல்லை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் பாவிகள் தம்மண்டைக்கு வரும்படி அழைக்கிறார் நான் அவரிடத்தில் போனேன்; அவர் என்னை இரட்சித்திருக்கிறார் என்று அறிந்திருக்கிறேன். அவர் கிருபையாய் அழைக்கும் அழைப்பில் நான் விசுவாசம் வைத்திருக்கிறபடியினால் அவருக்குள் மிகவும் சந்தோஷமாய் இருக்கிறேன்.'

மகன். 'நீர் இப்படிச் சொல்லக் கேட்டது மிகவும் சந்தோஷம் உம்முடைய மரணத்திற்குப் பிற்பாடு நாங்கள் செய்யவேண்டுமென்று நீர் விரும்புகிற ஏதாவது காரியம் உண்டா?'

தகப்பன். 'ஒரு காரியமும் இல்லை; என்னுடைய அடக்கம் கூடியஅளவு சாதுவாயிருக்கட்டும்; ஆனால் என்னுடைய கல்லறையில்மாத்திரம் பின்வரும் வார்த்தைகளை வெட்டிவையுங்கள்

'உல்லியம் கேரி ஐயர் 1761-ம் ௵ ஆகஸ்ற்று ௴ 17-ம் ௳ பிறந்து............ஜீவித்துப்போனார்.—

திக்கற்ற நீசப்பாவி நான, உம்மேலே சாருவேன்!'

கேரி ஐயர் மரிக்கிறதற்கு சில நாட்களுக்கு முன்னே டாக்ற்றர் டவ் என்பவர் அவரைப் பார்க்கும்படியாக போனார். அப்போது டாக்ற்றர் டவ் ஐயர் வாலிபனாக இருந்தார்.

டவ் ஐயர் அந்த மகாத்துமாவுக்காகவும், தேவனுடைய சபைக்காகவும், இன்னும் நடந்தேறவேண்டியதாயிருக்கிற மிஷன் வேலைக்காகவும் ஜெபம்பண்ணி, போய் வருகிறேன் என்று சொல்லி திரும்பினபோது, கேரி ஐயர் அவரைப் பார்த்து:

'டவ் ஐயரே! ஆம், ஆம்; டாக்ற்றர் கேரி, டாக்ற்றர் கேரி, டாக்ற்றர் கேரி என்று அவரைப்பற்றியே அதிகமாய்ப் பேசிக்கொண்டிருந்தீர். நான் மரித்தபின் டாக்ற்றர் கேரி என்பவரைப்பற்றி

யாதொன்றும் பேசாமல் அவருடைய இரட்சகரைப்பற்றியே பேசும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றார். மரணபடுக்கையிலிருந்த கேரி ஐயருக்கு வந்தன உபசாரஞ் செய்து, டவ் ஐயர் 'தேவனுடைய கிருபையினால் அப்படி செய்வேன்' என்று சொல்லிப் போனார்.

மரிக்கிறதற்கு முந்தின நாள் சாயரட்சை கேரி ஐயருடைய விருத்தாப்பிய சிநேகிதனான மார்ஷ்மன் ஐயர் அவரைப் பார்க்கும்படியாக போனார். அவர் கேரி ஐயரைப் பார்த்து, 'நற்செய்தி! நற்செய்தி! இங்கிலாந்திலுள்ளவர்களுக்குள் மிஷன் வேலை விஷயமாய் இப்போது அதிக பிரியம் உண்டாகியிருக்கிறது' என்றார். கேரி ஐயர் விதிர்த்துக்கொண்டிருக்கும் தம்முடைய கைகளை உயர்த்தி, 'கர்த்தருக்குக்கே துதியுண்டாவதாக, கர்த்தருக்கே துதியுண்டாவதாக; அவர் தம்முடைய வார்த்தையை மாற்றமாட்டார். சுவிசேஷப் பிரசங்கவேலை இன்னும் விருத்தியடையும்' என்று முகமலர்ச்சியோடு சிறு சத்தமாய்ச் சொன்னார்.

கேரி ஐயர் படுக்கையோரமாய் மார்ஷ்மன் ஐயர் முழந்தாள் படியிட்டு, கண்களில் கண்ணீர் ததும்பி நிற்க, மிகுந்த ஊக்கமாய் அவருக்காக ஜெபித்தார். அடுத்த நாள் 1834-ம் வருஷம் ஜூன் மீ 9-ம் உ சூரிய உதயத்தில் கேரி ஐயர் தம்முடைய பலனை அடையும்படி 73-வது வயதில் மறுமைக்குள்ளானார்.

## கேரி ஐயருடைய சரித்திரத்தினால் நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினை.

1. **விடாமுயற்சி.** விடாமுயற்சியே தம்முடைய சித்திக்குக் காரணம் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் முதிர்வயதாயிருந்தபோது, 'மெல்ல வென்றபோதிலும் விடாமுயற்சியாய் எந்த வேலையையும் செய்ய என்னால் கூடும்; இதுவே என் சித்திக்கெல்லாம் காரணம்' என்று சொன்னார்.

2. **பிரயாசம்.** 'ஒவ்வொரு நாளிலும் செய்யவேண்டிய வேலைகள் இன்னதென்று குறித்துவைத்து, நானே அவைகளைச் செய்துமுடிப்பேன்; அடிக்கடியும், சில வேளைகளில் ஒரு மணிநேரத்தில் அநேக தடவைகளிலும், என்னை உற்சாகப்படுத்திக்கொள்ளுவேன். நான் கைவிட்டுச் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் காணப்பட்ட என்னுடைய சோம்பல்தனத்தைக்குறித்து பிரமிப்போடு சிந்தித்துக்கொண்டிருப்பேன்' என்று சொல்லுகிறார். ஒரு வேலையை விட்டுவிட்டு இன்னொரு வேலையைச் செய்வதுதான் அவருக்கு இளைப்பாறுதலாய் இருந்தது. ஒரு நிமிஷத்தையும் வீணாகக் கழிக்கமாட்டார்.

3. **ஜனசார விஷயமாய் சீர்திருத்தமுண்டாகும்படி எடுத்த முயற்சிகள்.** ஜனங்களுடைய சுகவாழ்வுக்குரிய ஒவ்வொரு முயற்சியிலும் மிகவும் சிரத்தை எடுத்துவந்தார். கிருஷிகத் தொழிலை முன்னுக்குக் கொண்டுவரப் பிரயாசப்பட்டார். கடன் வாங்குகிறதினாலும் கலியாணங்களில் அனாவசியமாய் செலவு செய்வதினாலும் விளைகிற கேடுகளை எடுத்துக் காட்டினார்.

4. **வேதாகமங்களை மொழிபெயர்ப்பதில் அவர் காண்பித்த ஆவல்.** இவ்வேலையைத் தான் தம்முடைய ஜீவகாலத்தின் முக்கியமான வேலை என்று எண்ணினார். மரணபரியந்தம் இவ்வேலையையே மிகவும் கருத்தாய் செய்துவந்தார்.

5. **பணவிஷயங்களில் அவரிடத்தில் விளங்கின சுயவெறுப்பு.** அநேக வருஷங்களாக அவருக்கு மாதம் 1,250 ரூபாய் வருமானம் வந்துகொண்டிருந்தது. ஆனால் அதிலொரு சிறு பாகந் தவிர மற்றெல்லாவற்றையும் மிஷியோன் வேலைக்கென்று கொடுத்துவிட்டார்.

6. **மனத்தாழ்மை.** சுவிசேஷ விர்த்திக்காக அவர் எவ்வளவோ அரும்பிரயாசம் எடுத்து உழைத்திருந்தார்; அவர் ஆரம்பித்த மிஷனெரி வேலையானது எவ்வளவோ சித்தியடைந்திருந்தது. என்றாலும் தம்முடைய ஜீவகாலம் முழுவதும் அவர் மிகவும் மனத்தாழ்மையுடையவராய் நடந்துவந்தார்.

7. **ஜாதிவேற்றுமையினால் உண்டாகும் கேடுகள்.** கேரி ஐயர் முதல் முதல் செம்மான்வேலை செய்தவர். தாம் செம்மான் வேலை பார்த்தவர் என்று சொல்ல வெட்கப்படமாட்டார். பாராக்பூர் நந்தவனத்தில் மார்க்குவிஸ் ஆவ் ஹேஸ்ற்றிங்ஸ் என்பவரோடு ஒருநாள் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், விருந்தாளிகளில் ஒருவர் இன்னொருவரிடம், 'டாக்ற்றர் கேரி முன் சாப்பாத்துவேலை பார்த்தவர் அல்லவா?' என்று மெதுவாய்ச் சொன்னது அவர் காதில் விழுந்தது. அதின்பேரில் கேரி ஐயர்: 'ஐயா, அப்படியல்ல; பழைய சப்பாத்துகளைப் பழுதுபார்த்த வேலைதான் பார்த்தேன்' என மொழிந்தார்.

8. **முன் வைத்து நடந்த பிரமாணங்கள்.** கேரி ஐயர் இயேசு கிறிஸ்துவின் அருளைப் பெற்றுக்கொண்டவராய் இருந்தார். தம் முன் வைத்து நடந்த பிரமாணங்கள் என்னவென்றால்: 'தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்; தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய முயல்' என்பவைகளே. அவர் எப்பொழுதும் இயேசுகிறிஸ்து அருளும் சகாயத்தைத் தேடிக்கொண்டு அவருடைய வேலையைச் செய்யத் தொடங்கினார்.

---

London Mission Press, Nagercoil-1916.